Registered as a Newspaper in Ceylon ★ ★ விலேசதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily

மலர் 8 (27-7-66) இதழ் 167

பராபவ ஆடி 11 ரபி: ஆகி 8 புதன்கிழமை

தேசீய அரசாங்கத்தின் இரண்டாவது

வரவு-செலவு திட்டத்தில் (1966-67 நிதி ஆண்டு)

உத்தேச செலவு ரூ. 286 கோடி 60 லட்சம்

உத்தேச வருமானம் ரூ. 195 கோடி 80 லட்சம்.

# ரூ. 90 கோடி 80 லட்சம் துண்டுவிழும்!

## நிதி அமைச்சரின் புதிய வரவு-செலவு திட்ட மதிப்பீடு

### உணவுவிவசாய கைத்தொழில் அபிவிருத்திக்கு முக்கியத்துவம்

கொழும்பு, செவ்வாய்

தேசிய அரசாங்கத்தின் நிதி அமைச்சர் திரு. யு. பி. வன்னிநாயகா அடுத்த நிதியாண்டிற்கான உத்தேச வரவு செலவு மதிப்பீட்டை இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பித்தார். நிதியமைச்சர் தயாரித்துள்ள திட்டத்தின்படி தொண்ணூறுகோடியே எண்பதுலட்சம்ரூபாய் துண்டுவிழும். துண்டுவிழும் இத்தொகையை வரிகள், வெளிநாட்டு உதவிகள் மூலம் சரிக்கட்ட வேண்டியிருக்கும்.

### எவற்றுக்கு வரி? கடன் எவ்வளவு?

துண்டுவிழும் 90 கோடியே 80 லட்சம் ரூபாயையும் என்ன முறையில் சரிக்கட்ட உத்தேசித்திருக்கிறாரென்பதையும் எந்தெந்தப் பொருள்களுக்கு எவ்வளவு வரி விதிக்க உத்தேசித்திருக்கிறாரென்பதையும் வெளி நாடுகளிலிருந்து உதவியாகவும் கடனாகவும் எவ்வளவு கிடைக்குமென எதிர்பார்க்கின்றாரென்பதையும் இம்மாதம் 29-ந் திகதி வெள்ளிக்கிழமை நிதியமைச்சர் தமது வரவு—செலவுத் திட்டஉரையை நிகழ்த்துகையில் வெளியிடுவார்.

## வெளிநாட்டு உதவிகள் மூலம் ரூ. 60 கோடி சரிக்கட்டப்படும்?

### துண்டுவிழும் மீதி தொகைக்கு வரிகள் விதிக்கப்படலாம்

கொழும்பு, செவ்வாய்

வரவு செலவு மதிப்பீட்டில் துண்டுவிழும் 90 கோடியே 80 லட்சம் ரூபாவையும் சரிக்கட்டுவதற்காக வெளிநாடுகளிலிருந்து அரசாங்கம் சுமார் 60 கோடி ரூபாவுக்கு உதவிகள் பெறுவதற்கு வழிவகை செய்யும் என்று நம்பகமாக அறியப்படுகின்றது. மீதியுள்ள தொகையை வரிவிதிப்புகள் மூலம் அரசாங்கம் சமாளிக்கக்கூடும்.

வரவுசெலவுமதிப்பீட்டின்படி சுங்கவரிகளின் மூலம் அரசாங்கம்கடந்தஆண்டைவிட 4 கோடியே 40 லட்சம் ரூபாய் அதிகமாகவும், கலால்வரிமூலம் 1 கோடியே 90 லட்சம்ரூபாய் அதிகமாகவும் எதிர்பார்க்கின்றது. மண்ணெண்ணெய், மோட்டார் எண்ணெய், மற்றும் எரிபொருள்கள், பருத்தித் துணி மற்றும் சில்லறைச் சாமான்கள் வெளிநாடுகளிலிருந்து தருவிப்பதற்கான சுங்கவரிகள் மூலம் அதிக பணமும், புகையிலை மூலம் அதிகமான கலால் வரியும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பல்கலைக்கழகத்தின்

## ஆதிபத்திய உரிமையில் தலையீடு கூடாது

### உயர்கல்வி மசோதாமீது பேர்னுட் சொய்சா எம். பி, பேச்சு

கொழும், செவ்வாய்

உயர்கல்வி மசோதா நேற்றுமீண்டும் பிரதிநிதிகள்சபையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது கொழும்பு தெற்கு இரண்டாவது எம். பி. திரு. பேர்னுட் சொய்சா பேசினார்.

மூன்றுமணி நேரம் விடாமல் பேசிய அவர் இந்த மசோதாவைத் தம் அரசியல்கட்சி அடிப்படையிலன்றி தேசியஅடிப்படையில்நோக்குவதாகக் கூறினார்.

இந்த மசோதாவின்மூலம் நாட்டில் தகராறுகள்தான் ஏற்படும், இதுநிறைவேறிவிட்டால் நாட்டில் ஒரு இருள்யுகம் ஆரம்பிப்பதற்கு காரணமாகும் என்று அவர் குறிப்பிட்டார்,

பல்கலைக்கழகத்தின் ஆதிபத்திய நிர்வாகத்தில் தலையீடு இருக்கப்படாது. கல்வி மந்திரி ஒரு அரசியல்வாதி. அவர் அரசியல்கட்சி ஒன்றுக்கு விசுவாசமுள்ளவர். எனவே அவர் பல்கலைக்கழகத்தில் பொறுப்பை ஏற்

(8-ம் பக்கம் பார்க்க)

## பங்கீட்டரிசி குறையாது விலையும் உயராது!

உணவு மான்யத்தொகையில் வெட்டு எதுவும் உத்தேசிக்கப்படவில்லை ஆதலால், பங்கீட்டரிசியில் குறைவோ, பங்கீட்டரிசி விலை ஏறுமென்றோ அஞ்சுவதற்கோ இடமில்லை.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையின் விஸ்தரிப்புக்கும், புத்தளத்தில் இரண்டாவது சீமெந்துத் தொழிற்சாலை நிறுவுவதற்கும் நிதியாண்டில் மூன்று கோடியே 80 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மீன்பிடிக் கூட்டுத்தாபனத்துக்குத்தான் ஆகக் கூடிய தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கு நான்கு கோடியே ஐம்பது லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது

உணவு, விவசாயம், கைத்தொழில், மீன்பிடி அமைச்சுகளின் செலவுக்கு இம்முறை கூடிய தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

### செலவு

அரசாங்கத்தின் செலவு இம்முறை மிகக் கூடியதாக இருக்கிறது. 286 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவுத் தொகையாகக் கணிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இத்தொகை 252 கோடியே 20 லட்சமாக இருந்தது.

(8-ம் பக்கம் பார்க்க)

### கோவிலில் சிரமதானம்

சங்கானை, செவ்.

சங்கானையிலுள்ள சிவன் கோவிலில் சென்ற ஞாயிற்றுக்கிழமை சிரமதானமூலம் கோவிலைச் சுத்தம் செய்யும் பணி பண்டிதர் சி. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. அச்சமயம் சங்கானை இந்து வாலிபர் சங்கத்தினரும் சிரமதானத்தில் பங்கு பற்றினர்.

உயாகல்வி மசோதா

## பொதுமக்கள் கருத்துத் தெரிவிக்க 4 தினங்கள்

கொழும்பு, செவ்.

உயர்கல்வி மசோதா சம்பந்தமாக, ஆகஸ்ட் மாதம் முதல்திகதிதொடக்கம்நான்காம்திகதிவரை ஜனப்பிரதிநிதிகள் சபையின் நிரந்தரக் குழுவின்முன், பொதுமக்கள்தங்கள் கருத்தைத் தெரிவித்துக்கொள்ளலாம்,

ஜனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உயர்கல்வி மசோதாமீதான விவாதம் வியாழக்கிழமை வரை நடைபெறும். அதன்பின் நிரந்தரக் குழுவுக்கு அனுப்பப்படும்.

ஆளும்கட்சி அங்கத்தினர்கள் சமர்ப்பிக்கும் யோசனைகளையும், பிரதிநிதிகள்சபை விவாதத்தின்போது எதிர்க்கட்சியினர் தெரிவிக்கும் யோசனைகளையும் வைத்து ஆளும்கட்சி உபகுழு ரிக்கும் திருத்தங்களைத்தயாரிக்கும்,

## சன்லைட் போட்டி பரிசளிப்பு

சன்லைட் போட்டியில் பரிசு பெறுவோருக்கு

யாழ்ப்பாணம் திறந்த வெளி அரங்கில்

2-8-66 மாலை 6 மணிக்கு பரிசுகள் வழங்கப்படும்


பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ள விரும்புவோர் பிரவேசச் சீட்டாக மூன்று சிவப்புப் புள்ளிகளிட்ட இரண்டு சன்லைட் உறைகள் செலுத்தவேண்டும்

பரிசளிப்பு விழாவில்

கண்ணன் கோஷ்டியினரின்

கதம்ப நிகழ்ச்சியும், படக்காட்சி ஒன்றும் இடம்பெறும்

சன்லைட் மேலும்
பிரகாசமாகச் சலவை
செய்கிறது-
வேறெந்த சோப்பும்
நிகர் நிற்க முடியாத
பிரகாசம்.




JWT/S/4416 (T)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

தாதி

பிள்ளை ஒன்றைப் பராமரிப்பதற்கு ஒரு பெண் தேவை. சாப்பாடு போக நியாயமான சம்பளம் வழங்கப்படும். எஸ். குமாரசாமி, 889 A, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 793


## புயலுக்கு மூவர் பலி

ராவல்பிண்டி, ஜூலை 26

ராவல்பிண்டியில் நேற்று வீசிய புயலினால் மூவர் மாண்டனர்.


REGAL—JAFFNA
NOW SHOWING
Kerwin Mathews
in
Panic In Bangkog
(Cinemascope - Color)

இப்பொழுது நடைபெறுகிறது
இராஜநாயகி
(காங்கேசன்துறை)
"The Secret Seven"
(சினிமாஸ்கோப்)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர் - அஞ்சலிதேவி
நடித்த
சர்வாதிகாரி

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
ஜெமினி—சரோஜாதேவி
நடித்த
கைராசி


# ஆசிரியர்களும் பெற்றோரும் காட்டும் தயக்க மனப்பான்மை

## கல்வி மந்திரி கவலை

கொழும்பு, செவ்.

"அமெரிக்கா போன்ற பெரியநாடுகளில் வைத்திய சிகிச்சைக்காகப் பணம் கொடுக்கப்படுகின்றது. ரஷ்யா போன்ற சோஷலிஸ நாடுகளில்கூட ஆரம்ப வகுப்புகளில்தான் இலவச கல்வி யளிக்கப்படுகின்றது. உயர் வகுப்புகளுக்குக் கட்டணம் அறவிடப்படுகின்றது. ஆனந்தா, நாலந்தா போன்ற பெரிய கல்வி நிலையங்கள், பொதுநிதிகள் மூலமே வளர்ச்சியடைந்தன. ஆனால் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றதும், பாடசாலைத் தேவைகள் யாவற்றையும் அரசாங்கம் செலவிடவேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்."

ஜின்தோட்டையில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் கல்விமந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொலை பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:—

பாடசாலை மாணவர்களுக்கு ஒரு மலசலகூடம் கட்டுவதற்குக்கூட பெற்றோர்களும், ஆசிரியர்களும் பின் வாங்குகின்றனர். உயர்தர நடுத்தர வகுப்புகள் முக்கியமான சீர்திருத்தங்களை அமுல்செய்வதற்கு தங்களால் இயன்ற ஒத்துழைப்பையும், உதவியையும் அளிக்கவேண்டும்.

கல்விமசோதாவில் குறிப்பிட்டுள்ள செலவுகளுக்கு தங்கள் பங்குகளையும் செலுத்தி அரசாங்கத்துடன் ஒத்துழைக்குமாறு பெற்றோருக்கும், பெற்றோர் ஆசிரிய சங்கங்களுக்கும், சமூக உணர்ச்சியுள்ள மக்களுக்கும் கல்விமந்திரி வேண்டுகோள் விடுத்தார்.

புதிய கல்வி சீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டதும் ஏற்படும் பெரும் செலவினங்களுக்கு அரசாங்கம் மட்டுல் தேவையான நிதி ஒதுக்க முடியாதிருப்பதாகவும், வரியை உயர்த்தவேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்திற்குஏற்படுமென்றும், கல்வி மந்திரி மேலும் கூறினர்.

# "ஆசிரியர்களுடன் பெற்றோர் ஒத்துழைக்க வேண்டும்"

## எண்பது ஆண்டுகளுக்குப் பின் நடந்த வருடாந்த கூட்டத்தில் பேச்சு

உடுப்பிட்டி, செவ்வாய்

"மாணவர்கள் கல்வியில் ஊக்கம் கொள்ளுவதுடன் சமூகப்பணிகளிலும் ஈடுபட வேண்டும் மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவது கூடாது. தமது ஒய்வு நேரத்தை விவசாயம் முதலிய கைத்தொழில்கள் புரிவதில் செலவழிக்கவேண்டும். அதிகமான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் செய்யும் பிழைகட்கு ஆசிரியர்கள் மீதே பழிசுமத்துகிறார்கள், பெற்றோர் மத்தியில் இம்மாதிரியான தப்பெண்ணங்கள் நீங்க வேண்டும். பாடசாலையின் தேவைகளைப்பூர்த்திசெய்யும் பணியில் ஆசிரியர்களுடன் பெற்றோர்களும் ஒத்துழைக்க வேண்டும்"

கரணவாய் தெற்கு மணியகாரன் தோட்டம் சைவ வித்தியாசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்க வருடாந்தக் கூட்டம் 80 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன்முறையாக நடைபெற்றபோது தலைமையாசிரியர் திரு. ச. சுப்பையா தலைமை வகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அட்வகேட் திரு. ஆர். சிவபாதசுந்தரம் பேசுகையில், "பிள்ளைகளின் முன்னேற்றம், பெற்றோர் கையிலேயே தங்கியுள்ளது. 8 மணி நேரமும் பிள்ளைகளுடன் உறவாடும் ஆசிரியர்கள் பிள்ளைகளின் குணதிசயங்களையறிய முடியாது. பெற்றோரே தங்கள் சிறுர்களின் பழக்கவழக்கங்களை திருத்தியமைக்கவேண்டும்" என்று கூறினர்.

திருவாளர்கள் எஸ். செல்வநாயகம், பீ. கே. குலசிங்கம், கு. சுப்பிரமணியம், ஏ. கே. குமாரசாமி ஆகியோரும் பேசினர்.

300 பிள்ளைகள் கல்வி கற்கும் இப்பாடசாலையில் தற்பொழுது 125 பிள்ளைகட்கே ஆசனமுண்டென்றும், இடவசதிபோதாதென்றும், இது சம்பந்தமாக உடன்நடவடிக்கை யெடுக்குமாறு உதவி வித்தியாதிபதியையும் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்தையும் கோருவதெனவும், பாடசாலை வீதியை சிரமதானம் மூலம் திருத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.


போஷகர்கள்: உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், அட்வகேட் திரு. ஆர். சிவபாதசுந்தரம்; தலைவர்: திரு. ச. சுப்பையா; இணைக்காரியதரிசிகள்: திரு. [illegible] குமாரசாமி, எஸ். [illegible]


4-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)
பி: ப. 3, 6, 9-30 மணி

ஒரு பெண் பைத்தியமாக இருந்தபோது எதற்கோ சிரித்தாள்......எதற்கோ அழுதாள். ஆனால் மனநிலை தெளிந்த பிறகோ எதற்கோ துடித்தாள்.

மனநிலை தெளிந்த ஒரு பெண்ணின் சிறு கதைதான்



ஜெயலலிதா - ஸ்ரீகாந்த்
மற்றும் பலர் நடித்த
ஸ்ரீதரின்
"வெண்ணிற ஆடை"
(ஈஸ்ட்மன் கலர்)
இசை:—விஸ்வநாதன், ராமமூர்த்தி
கதை, வசனம், டைரக்ஷன்
ஸ்ரீதர்


# 'பறக்கும், நீந்தும்' மருத்துவ மனைகள்

ஹனோவர், ஜூலை 25

மருத்துவமனைகள் இருக்கும் இடங்களுக்கு நோயாளிகள் செல்வார்கள் ஆனால் நோயாளிகளைத் தேடிக் கொண்டு செல்லும் மருத்துவமனைகளும் இருக்கின்றன. நோயாளிகள் இருக்கும் இடங்களுக்குச் செல்ல வானில் பறந்தும் நீரில் நீந்தியும் இம்மருத்துவ மனைகள் செல்கின்றன.

'கிளினோ மொபைல்' எனப்பெயர்படைத்த "நகரும்-பறக்கும்-நீந்தும்" மருத்துவமனைகள் மேற்கு ஜெர்மனியில் தயாரிக்கப் படுகின்றன. இவ்வித மருத்துவமனைகளின் உலகில் 40 நாடுகளில் அரிய பணியாற்றுகின்றன. அன்னிய நாடுகளுக்கு பரிசளிக்கப்படும் சிறந்தபொருளாக 'கிளினோ மொபைல்' மருத்துவமனை அரசாங்கம் கருதுகிறது. 22 நாடுகளுக்கு 33 'கிளினோமொபைல்' மருத்துவமனைகளை மேற்கு ஜெர்மன் அரசாங்கம் அன்பளிப்பாக அளித்துள்ளது. சாலை செல்லும் நகரும் மருத்துவமனைகளிலும், விமானம், படகு, ரயில் இவற்றில் இணைக்கப்பட்ட மருத்துவமனைகளில் 'ஆபரேஷன்' செய்வதற்கான வசதி உள்பட எல்லாவிதமான நவீன வசதிகளும் உள்ளன.

## பயனற்ற உழவு இயந்திரங்கள்

குமுளமுனை, செவ்,

முல்லைத்தீவிலுள்ள அரசாங்க விவசாய இலாகாவிற்கு சொந்தமான ஒரு லட்ச ரூபாய்பெறுமதியுள்ள உழவு யந்திரங்கள் பழுதடைந்த நிலையில் வெய்யில், மழை பட்டு உக்கிக்கொண்டிருக்கிறது. ஆனல் இங்குள்ள ஏழை விவசாயிகள் உழுவதற்கு இயந்திரங்கள் இல்லாமல் கஷ்டப்படுகின்றார்கள்! இவ்வியந்திரங்களால் அரசாங்கத்திற்கோ, அல்லது விவசாயிகளுக்கோ எதுவித நன்மையும் இல்லை. இதுபற்றி சம்பந்தப்பட்டவர்களுக்குப் புகார் செய்திருந்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம்.

## உற்சவம் முடிவு

சங்கானை, செவ்வாய்

சங்கானை மேற்கில் சில்லாலையில் உள்ள "அர்ச். சந்தியோகமையோர்" கோவிலில் சில நாட்களாக உற்சவம் நடைபெற்று வந்தது. இன்று இறுதியாக சுற்றுப்பிரகாரமும் நடைபெற்றது.

## பராமரிப்பு வழக்கில் சிறைத்தண்டனை

ஊர்காவற்றுறை, செவ்.

கரம்பன் கிழக்கு வாசியான யோசேப் - மரியாம்பிள்ளை என்பவர் பராமரிப்புப்பணம் கட்டத் தவறியதற்காக அவருக்கு ஐந்து மாதம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இவர்இவரது மனைவி லூர்துமேரிக்கு பராமரிப்புப்பணம் கட்ட வேண்டுமென ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் தீர்க்கப்பட்டிருந்தது.

## தமிழ்க் கல்வி பொதுநலச் சங்கம்

கொழும்பு, செவ்வாய்

தமிழ்க்கல்வி பொதுநலச் சங்கத்தின் ஆரம்பக் கூட்டமொன்று இம்மாதம் 30-ம் திகதி மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும்,

தனாதிகாரி: திரு. கே. வேலாயுதம். நிர்வாக சபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.


## விளம்பரம்

### கட்டிடப் பொருட்கள் விற்பனைக்கு

இச்சமாசத்திலிருக்கும் பின் வரும் பொருட்கள் கேள்விப்பத்திர மூலம் விற்பனை செய்யப்படும்.

1. பாலைத் தீராந்திகள் (சுமார் 1000 நீள அடி)
2. பாவறணைத் தீராந்திகள் (சுமார் 25 நீள அடி)
3. காட்டாமணக்குப் பலகை (சுமார் 75 சதுர அடி)
4. பனைமரங்கள் (சுமார் 400 முழம்)
5. காட்டுத் தடிகள் (சுமார் 250 தடிகள்)
6. கம்பிவலை (Xpanded Metal) பொருத்தப்பட்ட "பிறேம்கள்" (26)
7. "பவுண்டேசன்" கற்கள் (சுமார் 20 கியூப்)
8. சாதாரண கண்ணாடிகள் (4 பெட்டிகள்)

கொள்வனவு செய்ய விரும்புவோர் தமது கேள்விகளை 2/8/66 பகல் 12-00 மணிக்கு முன் சமாசக் காரியதரிசிக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பவேண்டும். கேள்விப்பத்திரங்கள் சமாசக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலே சொல்லப்பட்ட 8 இனப் பொருட்களும் இனவகுப்புப் பிரகாரம் மொத்தமாக விற்கப்படும்.

வே. நடராசா
காரியதரிசி,
தென்மராட்சி
ப. நோ. கூ. ச. சமாசம்
சாவகச்சேரி,
55-7-66. 692

## கேள்வி விளம்பரம்

### கற்கோவளம் மீன்பிடி இலாகா தெருவேலை

ஒழுங்கை வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் 4-8-66 வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை புலோலிக் கிராமசபைத் தலைவரால் வழங்கப்படும். கேள்விப்பத்திரங்கள் தலைவருக்கு 6-8-66 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அல்லதுநேரில் சமர்ப்பிக்கலாம்.

கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 15-00ம் கேள்விப் பிணைப்பணமாக ரூபா 100-00-ம் கட்டியதன் பேரில் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

மற்றும் விபரங்களை விட பிரதேச (மேல்) உள்ளூராட்சி உதவி அதிபரின் கந்தோரில் அல்லது எமது கந்தோரில் கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

த. சிதம்பரப்பிள்ளை,
தலைவர்,
புலோலிக் கிராமசபை.
புலோலிக் கி. ச. கந்தோர்,
பருத்தித்துறை.
24-7-66. 693


## தரம் உயர்வு

கனகராயன்குளம், செவ்

இதுவரை வவுனிக்குள நீர்ப்பாசனக்கந்தோர், ஒரு நீர்ப்பாசன குடியேற்றத் திட்டக் கந்தோராகவே இயங்கி வந்தது. ஆனல் இம்மாத முதலாம் திகதியிலிருந்து வவுனிக்குள நீர்ப்பாசனக்கந்தோர் ஒரு உபபிரிவாக இயங்கிவரத் தொடங்கியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நகரமண்டப அரங்கு திறப்புவிழா

யாழ்ப்பாணம், புதன்

மானிப்பாய் நகரமண்டப அரங்கை அரசாங்க அதிபர் திரு வேணன் அபயசேகரா நாளை திறந்துவைப்பார். திறப்புவிழாவுக்கு திரு. [illegible] பதிராசா தலைமைவகிப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு வியட்னுமில் இராணுவ படையெடுப்பு வேண்டும்

## தென்வியட்னும் பிரதமர் கோரிக்கை

### "தென்கிழக்கு ஆசியாவின் பிரதான எதிரி சீனுவே"

சைகோன், ஜூலை 26

"வடக்கு வியட்னுமில் குண்டு வீச்சு மட்டும் நடத்தினுல் போதாது இராணுவப் படையெடுப்பை அங்கு மேற்கொள்ள வெண்டும்" என்று தென் வியட்னும் பிரதமர் ஏர் வைஸ் மார்ஷல் கீ கோரியுள்ளார்.

தென் வியட்னும் பிரதமர் கீ, நேற்று வானெலியில் விடுத்த செய்தியொன்றில் கம்யூனிஸ்ட் சீனுவின் நடவடிக்கைகள் பற்றியும் தெரிவித்திருந்தார்.

"தென் கிழக்கு ஆசியாவின் பிரதான எதிரி சீனுதான்.

சீனுவைக் கட்டுப்படுத்த உடனடியான நடவடிக்கைகள் கையாளப் படவேண்டும். சீனுவை ஐந்து அல்லது பத்து வருடங்களில் எதிர்க்க வேண்டும் என்ற நிலையாறி உடனடியாக அதனை எதிர்க்க அமெரிக்கா முன்வரவேண்டும்" என்றும் பிரதமர் கீ குறிப்பிட்டுள்ளார்.

---

ஐ. நா. வில்

## இஸ்ரேல் - ஸிரிய நெருக்கடி

ஐ. நா. (நியுயோர்க்) ஜூலை 26

ஸிரிய எல்லைமீது விமானத் தாக்குதல்கள் நடத்தியதாக இஸ்ரேலைக் குற்றம் சாட்டி ஸிரியா செய்து கொண்ட புகார் சம்பந்தமாக விவாதிக்கும் பொருட்டு நேற்றிரவு ஐ. நா பந்தோபஸ்து சபை கூடியது.

பந்தோபஸ்து சபை கூட்டப்பட்டு இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று ஸிரியா முதலில் கேட்டிருந்தது. இதன் பின்னர் இஸ்ரேலும் இதுசம்பந்தமான முறைப்பாடொன்றை பந்தோபஸ்து சபையில்தாக்கல் செய்தது.

தாக்குதல் நிகழ்ந்த தினமன்று இஸ்ரேல் பிரதிநிதி திரு. மைக்கல் கொமே, பந்தோபஸ்து சபைக்கு தனது நாட்டு நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிட்டிருந்த போதிலும் ஐ. நா. தலையீட்டை அவர் கோரவில்லை.

1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் திகதிக்குப் பின்னர், அராபிய - இஸ்ரேல் நெருக்கடி பாதுகாப்பு சபைக்கு முன்னர் வருவது இதுதான் முதற் தடவையாகும். (பி. டி. ஸி)

---

## ஜப்பானில் குரோமிக்கோ

டோக்கியோ, ஜூலை 24

சோவியத் வெளிநாட்டு மந்திரி திரு. அன்ரி குரோமிக்கோ இன்றிரவு இங்கு வந்து சேர்ந்தார். அவர் ஜப்பானில் ஒரு வாரம் தங்குவார். ஜப்பானியத் தலைவர்களுடன் வியட்னும் பற்றிப் பேசத்தாம் தயாரென அவர் தெரிவித்தார். இன்றைய உலக நெருக்கடி ஆபத்தானது என அவர் மேலும் தெரிவித்தார்.

---

லக்னேவில்

## பொலிஸ்-மாணவர் மோதல்: 159 பேர் காயம்

லக்னே, ஜூலை 26

தடைஉத்தரவைமீறி ஊர்வலமாகச்சென்ற மாணவர்களைப்பொலிஸார் தடுத்த பொழுது ஏற்பட்ட மோதலில்பொலிஸ்சுப்பிரிண்டன், உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர், கான்ஸ்டபிள்கள் உள்ளிட்டுபொலிஸ்தரப்பில் 64பேர் காயமடைந்தனர். பொலிஸ் கான்ஸ்டபிள்கள் ஆபத்தான நிலையில்ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்களுக்கும் பொலிஸாருக்குமிடையில் நிகழ்ந்த கைகலப்பு காரணமாக 95 மாணவர்கள் காயமடைந்தன்ரென்றும்25 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டனர்என்றும் கூறப்படுகிறது.

---

## 47 கொரில்லாக்கள் மாண்டனர்

சைகோன், ஜூலை 26

சைகோனிலிருந்து தென் மேற்கே 150 மைல் தூரத்தில் தென்வியட்னும் துருப்புகள் நடத்திய தீவிரமான தாக்குதல்களில் 38 கொரில்லாக்கள் பலியானுர்கள்.

நேற்று, கம்போடிய எல்லைக்கருகே நடைபெற்ற மற்றுமொரு தாக்குதலில் 19 கொரில்லாக்கள் பலியானுர்கள்.

இரண்டு தாக்குதலின் போதும் தென்வியட்னும் துருப்புகளுக்கு சிறிதளவு சேதமே ஏற்பட்டதென்று இராணுவ பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

(பி டி ஸி)

---

## 'தொண்டர்களின் உதவி இப்போதைக்கு தேவையில்லை'

— ஹோ

ஹனேய், ஜூலை 26

தொண்டர்களின் உதவி வடக்கு வியட்னுமுக்கு இப்போதைக்குத் தேவையில்லை என்று அதிபர் ஹோ-சி-மின் தெரிவித்துள்ளார்.

வியட்னும் சண்டையில் வடக்குவியட்னுமுக்கு உதவி அளிக்கஅங்கு தொண்டர்களை அனுப்புவதென்று அண்மையில் வார்ஸா ஒப்பந்த நாடுகள் தீர்மானித்திருந்தன. வடக்கு வியட்னும் கோரும் பட்சத்தில் தொண்டர்கள் அனுப்பப்படுவார்கள் என்றும் இந்த நாடுகள் அறிவித்திருந்தன.

இதுபற்றி வடக்கு வியட்னும் அதிபர் ஹோ-சி-மின் தெரிவிக்கையில், தொண்டர்களின் உதவி தங்களுக்கு இப்போதைக்குத் தேவையில்லை என்றும் ஆனுல் தருணம் வரும்போது இவ்வுதவியைத் தாம் கோருவதாகவும் கூறினுர்.

நேற்றுசில பத்திரிகைநிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில், கைப்பற்றப்பட்ட அமெரிக்க விமானிகள் நிலைபற்றி அவர் குறிப்பிட்டிருந்தார்.

"மனிதாபிமான முறையில் அவர்களை வடக்கு வியட்னும் நடத்தும்" என்று தாம் அமெரிக்காவுக்கு அறிவித்திருப்பதாக ஹோ அப்போது தெரிவித்தார்.

---

## போர்விமானங்கள் வாபஸ் பெறப்படும்

லண்டன், ஜூலை 26

ஜிபிரால்டர் தளத்திலுள்ள ராயல் விமானப் படையைச் சேர்ந்த போர் விமான அணி ஒன்றை பிரிட்டன் வெகுவிரைவில் வாபஸ் பெற இருக்கிறது. பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு இந்த தகவலை அறிவித்தது.

பிரிட்டன் தனது பாதுகாப்பு செலவினங்களை குறைக்கப்போவதாக பிரிட்டிஷ் பிரதமர் திரு ஹரல்ட் வில்ஸன் சமீபத்தில் அறிவித்தார் என்பது தெரிந்ததே. ஜிபிரால்டர் தளத்திலுள்ள "ஷக்கல்டன்" போர்விமானங்களை வாபஸ் பெறுவதே பிரிட்டிஷ் அரசாங்கம் செய்துள்ள முடிவுகளில் ஒன்ருகும்.

"நேட்டோ" படையின் ஓர் அம்சமாகவே இந்தப் போர் விமானங்கள்ஜிபிரால்டர் தளத்தில் வைக்கப்பட்டிருந்தன. இந்த போர் விமானங்கள் பிரிட்டனிலிருந்து "நேட்டோ" படைப் பிரிவுகளில்ஒன்ருகஇயங்கும்.

---

## இந்திராவுக்கு ஆதரவு

அடிஸ் அபாபா, ஜூலை26

ஜெனிவா மகாநாட்டைக் கூட்டுவதன்மூலம் வியட்னும் போருக்குத் தீர்வு காணும்படி இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி விடுத்துள்ள அழைப்பைத் தாம் ஆதரிப்பதாக எதியோப்பிய அரசர் ஹெயிலி செலாஸி இங்கு அறிவித்துள்ளார்.

---

## ஆசிரியர்களைக் கண்டிக்கும் மாணவர்கள்

மேற்கு பேர்லின் ஜூலை 26

மாணவர்கள் ஒழுங்காகப் படிக்கவில்லையென்ருல், ஆசிரியர்கள் கண்டித்துப் புத்திமதி சொல்லித் திருத்த முயலுவார்கள். ஆனுல் காலம் மாறி வருகிறது. சீராகக் கல்வி போதிக்காத ஆசிரியர்களைப் பகிரங்கமாக கண்டிப்பதில் மாணவர்கள் முனைந்துள்ளனர்.

கல்வித்துறையில் ஒரு திருப்பு முனையாக அமைந்துள்ள இப்புரட்சிமுறை குறித்து மேற்கு ஜேர்மனியில் சில ஆசிரியர்கள் "வரவேற்கிருர்கள்." சிலர்வெகுண்டு எழுந்திருக்கிருர்கள்.

சீராகச் செயல்படாத ஆசிரியர்களை மாணவர்கள் கண்டிக்கும் முறை, அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் நடைமுறையில் இருக்கிறது. ஆனுல் மேற்கு ஜெர்மனியில் இதுபுதுமை.

மேற்கு பேர்லினிலுள்ள சுதந்திரப் பல்கலைக் கழகத்தின் மாணவர்கள், சமீபத்தில் மாணவர்களுக்கானபத்திரிகைகளில் மூன்று கட்டுரைகளை வெளியிட்டு ஆசிரியர்களை "வெளுத்துக் கட்டியுள்ளனர்" ஆசிரியரின் போதனு திறமைக்கு ஏற்ப மதிப்பெண்களும் அளித்திருந்தனர். ஓர் ஆசிரியர், முன்னேற்பாடு எதுவுமின்றி சொல்லிக் கொடுக்க வந்துவிடுவதாகவும் மாணவர்கள் குற்றம்சாட்டியிருந்தனர்.

ஆசிரியர்களை மாணவர்கள் கண்டிக்கும் முறைக்கு சில பேராசிரியர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். ஆனுல் மற்றும் சிலரோ "காலம் மாறிவருகிறது; நமது குறைபாடுகளைச் சுட்டிக் காண்பிப்பதில் தவறு எதுவுமில்லை எனக் கருதுகிருர்கள். இதன் மூலம் ஆசிரியர்—மாணவர் உறவில் புதிய மாற்றம் ஏற்படக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

## தமிழ் நாட்டுச் செய்திகள்

### 50 பேர் காயம்

மணப்பாறையிலிருந்து 7 மைல் தூரத்தில் வையம்பட்டி என்னுமிடத்தில் நேற்று முன்தினம் பஸ் ஒன்று மரத்துடன் மோதியதில் 50 பேர் காயமடைந்தனர், இந்தப் பஸ்ஸில் உல்லாசப் பிரயாணிகள் இருந்தனர். பஸ் சாரதி உள்ளிட்டு ஆறு பேரின் நிலைமை கவலைக்கிடமாகவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

ஃ ஃ ஃ

### கடும் மழை

தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் கடுமையான மழை பெய்துவருகிறது.

ஃ ஃ ஃ

### நாவல் விழா

தமிழில் இதுவரை வெளிவந்துள்ள நாவல்களில் பதினைந்து நாவல்களைப் பற்றிய விமர்சன அரங்கு, தமிழ் எழுத்தாளர் சங்கச்சார்பில் திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பாடசாலையில் சிறப்பாக நடைபெற்றது. முதல் நாள் நிகழ்ச்சிகளுக்கு கலைமகள் ஆசிரியர் திரு. கி, வா. ஜகந்நாதன் தலைமை வகித்தார். அப்பொழுது சரித்திர நாவல்களாகிய 'சிவகாமியின் சபதம்', 'கன்னிமாடம்' 'வீரபாண்டியன் மனைவி' 'நந்திபுரத்து நாயகி' ஆகியவை பரிசிலனை செய்யப்பட்டன.

ஃ ஃ ஃ

### கோரமரணம்

25 வயதுள்ள இளைஞர் ஒருவர் கிண்டியில் ரயில் பாதையைக்கடந்தபொழுது தாம்பரத்திலிருந்து சென்றுகொண்டிருந்த மின்சார ரயிலினுல் மோதுண்டு ஸ்தலத்திலேயே பலியானுர். அவரது உடல் மூன்று துண்டுகளாகச் சிதறுண்டுகிடந்தன,

ஃ ஃ ஃ

### மற்றுமொருவர் பலி

'விக்கிராண்ட்' யுத்தக் கப்பலைச் சேர்ந்த சித்ரபாபு சிங் (வயது 25) என்னும் கடற்படை வீரர் சென்னைக் கோட்டைரயில் நிலயத்தில் மின்சார ரயிலில்மோதுண்டு மரணமானுர்.

ஃ ஃ ஃ

### யமனுகவந்த பால்கோவா

சென்னையில் சூளைஎன்னும் இடத்தில் பால்கோவா சாப்பிட்ட இரு குழந்தைகளில் ஒரு குழந்தை மரணமானது.

### கடத்தல்வழக்கு

40,000 ரூபாய்மதிப்புள்ள கள்ளத்தங்கம் வைத்திருந்ததாகக் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ஆட்சேபித்து கே. எஸ். கே. சுப்பிரமணியம் என்பவர் தாக்கல் செய்திருந்த அப்பீலை நீதிபதி தள்ளுபடி செய்துள்ளாார்.

ஃ ஃ ஃ

### திருச்சியில் வியட்னும்

வடக்குவியட்னுமில் அமெரிக்க குண்டு வீச்சை ஆட்சேபித்து இடதுசாரி கம்யூனிஸ்டுகள் அமெரிக்க ஜனுதிபதி ஜோன்ஸன் கொடும்பாவியை ஊர்வலமாக இழுத்துச்சென்றனர்

ஃ ஃ ஃ

### வால்காட்வழக்கு

அமெரிக்கக் கள்ளக்கடத்தல் மன்னன் வால்காட் வழக்கு சென்னை எழும்பூர் 5-வது மாகாண மாஜிஸ்டிரேட் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. சாட்சியை வால்காட் குறுக்கு விசாரணை செய்தார்.

ஃ ஃ ஃ

### காங்கிரஸ் மகாநாடு

ருச்சி மாவட்டக் காங்கிரஸ் தேர்தல் மகாநாடு அடுத்த மாதம் நடைபெறும், மத்திய மந்திரிகள் கலந்துகொள்ளும் இம்மகாநாட்டில் நடிகை பத்மினியின் நாட்டிய நாடகமும், சிவாஜி கணேசனின் நாடகமொன்றும் நடைபெறும்.

ஃ ஃ ஃ

### படுகொலை

கலப்புத்திருமணம் செய்த வாலிபர் ஒருவர் பங்களூரில் ஒரு குளத்தில் படுகொலை செய்யப்பட்டார். அவரது கை, கால்கள் கட்டப்பட்டிருந்தன. இதுசம்பந்தமாக இன்றுவரை எவரும் கைது செய்யப்படவில்லை

ஃ ஃ ஃ

### பொலிசார்கைது

கோவை ஆயுதப்பொலிஸ் படையைசேர்ந்த சிலபொலிசார் லொறியில் அரிசி கடத்திச்சென்றதாக வேலூரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

ஃ ஃ ஃ

### நேரு நினைவுநிதி

சென்னை ராஜ்யத்திலுள்ள நகரசபைகள் நேரு நினைவு நிதிக்குத் தமது பொது நிதியிலிருந்து நன்கொடை வழங்குவதற்கு அரசாங்கம் அனுமதித்துள்ளது.

ஃ ஃ ஃ

### பொலிஸ்பரிசு

கடத்தல் மன்னன் வால்காட் டோன்ஸே ஆகிய இருவரும் சென்னை மத்தியசிறையிலிருந்துதப்பியோட முயற்சித்த பொழுது தக்க சமயத்தில் பார்த்துக் கூச்சலிட்டு அவர்களைப் பிடித்துக் கொடுத்த லான்ஸ்நாயக் பெருமாளுக்கு மத்திய புலன் விசாரணைப் பிரிவு 100 ரூபா ரொக்கப் பரிசு வழங்கியுள்ளது இவருக்கு ஏற்கனவே பொலிஸ் இலாகா ரொக்கப் பரிசு அளித்திருக்கிறது.

ஃ ஃ ஃ

### மரணதண்டனை

உளத்துக்குளி காங்கிரஸ்காரர் கொலைவழக்கில் அதே ஊரைச் சேர்ந்த பஞ்சாயத்து அங்கத்தவர் ஷண்முகம் எஸ்பவருக்கு மரணதண்டனையும் எட்டு எதிரிகளுக்கு ஒரு வருடம் முதல் இரண்டு ஆண்டுவரை சிறைத்தண்டனையும் விதித்த கோவை அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி தீர்ப்பளித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அறிவையும் பொறுமையையும் தக்க சமயத்தில் உபயோகித்தால் எவராலும் தகர்க்கவே முடியாத சக்தி வந்து சேரும்.

—மகாத்மா காந்தி


# ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஆடி மீ 11 உ (27-7-66)


## அரசாங்கமும் கல்வியும்

சர்ச்சையைக் கிளப்பியுள்ள உயர்கல்வி மசோதாவை கட்சி விஷயமாகக் கருதக்கூடாதென்றும் நாட்டின் கல்விப் பிரச்னை ஒரு தேசியப் பிரச்னையாகையால் ஆளும் கட்சி அங்கத்தவர்கள் மட்டுமல்ல எதிர்க்கட்சி அங்கத்தவர்களும் தங்கள் கருத்தைத் தெரிவிப்பதுடன் உருப்படியான திருத்தங்களையும் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பமளிக்கப்படவேண்டுமென்றும் பிரதமர் தெரிவித்திருக்கிறார். ஆளும் கட்சி அங்கத்தவர்கள் கல்வி மசோதாவுக்கான திருத்தங்களையும் யோசனைகளையும் தெரிவிப்பதற்கு அரசாங்கக் கட்சியில் விசேஷ உபகுழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த மசோதா பற்றிப் பொதுமக்கள் தங்கள் கருத்தைத் தெரிவிப்பதற்கு இம்மசோதாவை நிர்ந்தரக்குழுவுக்கு விடவும் பிரதமர் உத்தேசித்துள்ளார். பிரதமரின் இச்செயல் அவர் உண்மையான ஜனநாயகத்தைப் பின்பற்றுகிறாரென்பதை மட்டுமல்லாது தேசியத் தலைவருக்கு அவர் பொருத்தமானவரென்பதையும் நிரூபிப்பதாக உள்ளது. தேசியப் பிரச்னைகள் அனைத்திலும் அவர் இதே முறையைப் பின்பற்ற வேண்டும்.

பிரதமர் பின்பற்றும் உண்மையான ஜனநாயக முறைக்கு ஆளும் கட்சியினர் மட்டுமல்லாது எதிர்க்கட்சியினரும் தங்கள் கட்சி நலன்களை விடுத்து, நாட்டின் நலனைக்கருதி உதவியும் ஒத்துழைப்பும் அளித்தால் நிச்சயம் நாடு முன்னேற்றப்பாதையில் துரிதமாகச் செல்ல வழிபிறக்கும்.

உயர்கல்வி மசோதாவைத் தயாரித்து பார்லிமெண்டில் சமர்ப்பித்துள்ள கல்வி அமைச்சர், இப்போதுள்ள பல்கலைக்கழகங்கள் நாட்டின் கல்வித்தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறிவிட்டன என்றும் நாட்டுமக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்ய முடியாமல் போய்விட்டதென்றும் குறிப்பிட்டதுடன் பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு தலைவராவது உருவாகவில்லையென்றும் கூறியிருக்கிறார். கல்வி அமைச்சரின் இக்கருத்தை முற்றாக மறுக்கமுடியாது. இப்போதுள்ள பல்கலைக் கழகங்கள் தேசிய நோக்கங்களுக்கேற்ப செயல்படவில்லையென்பது உண்மையே.

பல்கலைக்கழகங்கள் தேசியநோக்கங்களை நிறைவேற்றக்கூடியதாக இருக்கவேண்டுமானால் அரசாங்கத்துக்கும் கல்விக்கும் தொடர்பிருக்கவேண்டுமென்பதும் சரியானதே. ஆனால் பல்கலைக்கழகம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கக்கூடாது என்பதே எமது கருத்து. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் பல்கலைக்கழகங்கள் இருக்கவேண்டுமென்பதையே நாம் எதிர்க்கிறோம். பல்கலைக்கழகங்கள் இயங்குவதற்கு அரசாங்கம் பணஉதவி புரிவதால் அவற்றைக்கட்டுப்படுத்தும் உரிமை அரசாங்கத்துக்கு இருக்கவேண்டுமென்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய வாதமல்ல. இங்கிலாந்திலும் இந்தியாவிலும் மற்றும் பல ஜனநாயக நாடுகளிலும் பல்கலைக்கழகங்களுக்கு அந்நாட்டு அரசாங்கங்கள் பணஉதவி அளிக்கின்றன. அங்கு கல்விக்கும் அரசாங்கத்துக்கும் தொடர்பிருக்கின்றது, நாட்டின் தேவைகளுக்கேற்ப அரசாங்கம் தனது நோக்கங்களை நிறைவேற்ற, அதனால் தோன்றக்கூடிய நிலைமைகளைச் சமாளிக்க இங்கிலாந்திலும் இந்தியாவிலும் மான்யக் கமிஷன்கள் நியமிக்கப்பட்டு செயல்படுகின்றன. பல்கலைக்கழகங்களின் பணத்தேவையை இக்கமிஷன் நேரில் சென்று ஆராய்ந்து அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்கின்றது. நாட்டின் தேவை சிலவற்றை பல்கலைக்கழகங்கள் பூர்த்தி செய்யக்கூடிய முறையில் செயல்படவில்லையென அரசாங்கம் கருதினால், அக்கருத்தை மான்யக் கமிஷன் பல்கலைக்கழகங்களுக்கு எடுத்துக்காட்டி அதற்கேற்ப நிலைமையைச் சமாளிக்கிறது. இதனால் பல்கலைக் கழகங்கள்மீது அரசாங்கத்துக்கோ, அமைச்சுக்கோ நேரடியான கட்டுப்பாடு இருக்கமாட்டாது. இதுவே கல்வித் திட்டம் சிக்கலில்லாமல் நாட்டின் தேவைகளை நிறைவேற்றக்கூடிய முறையில் செயல்படமுடியும். இதேமுறையை இலங்கையும் பின்பற்றுவது பயனளிக்கும்.

## இந்திய பாராளுமன்ற சபைகளில் குழப்பம்

புதுடில்லி, ஜூலை 26

உத்தரப் பிரதேசத்தில் வேலைநிறுத்தம் பற்றிநேற்று லோகசபையில் நடைபெற்ற விவாதத்தின்போது. அங்கத்தவர்கள் சபை ஒழுங்குகளை அனுசரிக்காது கூச்சல் போட்டுக் குழப்பம் விளைவித்ததன் பலனாகச் சபாநாயகர் கூட்டத்தை ஒரு மணித்தியாலயத்திற்கு ஒத்திப் போடவேண்டியிருந்தது.

ராஜ்யசபையிலும் அங்கத்தவர்கள் குழப்பம் காரணமாக இருதடவை சபையின் நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன. (பி. டி. ஐ.)

## புதிய பட்டினசபை

குரும்பசிட்டி, சனி

உள்ளூராட்சி ஆணையாளர் திரு. டபிள்யூ. ஜே. பெர்னாண்டோ தற்போது பண்டத்தரிப்பு கிராமசபையை சேர்ந்த நாலு வட்டாரங்களையும், சுழிபுரம் கி. சபையின் நான்கு வட்டாரங்களையும் ஒன்றாக இணைத்து பண்டத்தரிப்பு பட்டினசபை ஒன்றை அமைக்க முன்வந்துள்ளார். இதுசம்பந்தமான அலுவல்களை வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளரைக் கவனிக்கும்படி கேட்கப்பட்டுள்ளார்.

# "கூட்டுறவு இயக்கம் மூலம் உற்பத்தியை பெருக்க முன்வருக"

## படித்த இளைஞர்களுக்கு எம். பி. அழைப்பு

சங்கானை, செவ்வாய்

"ஒற்றுமை என்பதை அத்திபாரமிட்டு, நேர்மை, நம்பிக்கை என்ற பொருள்களைக்கொண்டுதான் கூட்டுறவு என்ற கட்டிடத்தை அமைக்கவேண்டும் இதில் ஒரு பொருள் குறைந்தாலும் கட்டிடம் அசைவு கொடுக்கும். ஊழல் மலிகின்றதே என்று மக்கள் வெறுப்புணர்ச்சியடைய து விழிப்புணர்ச்சியோடு இருந்தால் எந்தக் குறைபாடும் ஏற்படாது' என்று வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் வலிமேற்கு கூட்டுறவு விழாவிற்பேசும்போது குறிப்பிட்டார். விழாவிற்கு வலி- மற்கு சமாசத்தலைவர் திரு. க. கெங்காதரம் தலைமை வகித்தார்.

தொடர்ந்து திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

"நாட்டிலே மக்கள் தொகை பெருகிவருகின்றது அதற்கேற்றபடி உணவு உற்பத்தி செய்ய நம்மிடம் விஞ்ஞான சாதனங்கள் இல்லை. பெருந் தொழில்களில் ஈடுபட மூலதனம் இல்லை எனவே கூட்டுறவு இயக்கம்தான் எமக்குக் கைகொடுத்துதவ வேண்டும், உப உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யப் பெருமளவு ஏக்கர் நிலங்களை அரசாங்கம் தனியார் துறைக்குக் கொடுக்க இருக்கின்றது. கூட்டுறவு இயக்க மூலம் இந்த நிலத்தைப் பெற்று உற்பத்தியைப் பெருக்க படித்த வாலிபர்கள் முன்வரவேண்டும். தமிழர்களின் எதிர்காலம் கூட்டுறவு விவசாயத்திலேயே தங்கியுள்ளது."

உதவி அரசாங்க அதிபர் திரு. யே. எம். சபாரத்தினம் பேசுகையில், வெங்காயம், மிளகாய், உருளைக் கிழங்கு போன்ற உப உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு பெருந்தொகையான அந்நியச்செலவாணி செலவாகிறது. இப்பொருட்களை இங்கு நாம் உற்பத்தி செய்தால் தொழில் வசதியேற்படுவதோடு அந்நியச் செலாவணியும் மிச்சமாகும். படித்த வாலிபர்கள் அரசாங்கம் பகிர்ந்தளிக்கும் காணியைப் பெற முன்வரவேண்டும்" என்று கூறினார்.

சங்கானைப் பட்டினசபைத் தலைவர் திரு. கி.க. திருச்சிற்றம்பலம் பேசுகையில் கூட்டுறவு இயக்கம் நமது இயக்கம் என்ற உணர்ச்சி எங்களிடம் பரவவேண்டும். கூட்டுறவு மொத்தஸ்தாபனத்தின் பிரதான கிளைகள் மாவட்டந்தோறும் ஆக்கப்படவேண்டும். அதிகாரங்களும் வேலைகளும் பரவலாக்கப்படவேண்டும்' என்று கூறினார். கூட்டுறவு உதவிஆணையாளர் க சி பொன்னுத்துரை, வலிமேற்குக் காரியாதிகாரி சி மாணிக்கநடராசா உட்படப்பலர் பேசினர் அண்மையில் காலஞ்சென்ற கூட்டுறவுப் பரிசோதகர் திரு மு பாலசுப்பிரமணியம்தின் உருவப்படம் ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டு திரைநீக்கம் செய்யப்பட்டது

## ஸ்டேஷன்பஸ்சேவை பற்றி புகார்

சங்கானை, செவ்.

புகையிரத சேவையுடன் இணைக்கப்பட்டுள்ள காலை மாலை டஸ் சேவையில் ஒழுங்கீனங்கள் இருப்பதாகத் தெரியவருகின்றது

சில சமயங்களில் தாமதித்துவரும் ரயில் வண்டியை எதிர்பார்த்து பஸ் வண்டிகள் நிற்பதில்லை. வழக்கமாக ஒரே ஒரு பஸ்தான் புகையிரத நிலையத்திலிருந்து முழுப் பிரயாணிகளையும் பஸ்நிலையத்துக்குக் கொண்டுசெல்கின்றது. களைப்புடன் வரும் பிரயாணிகளை ஒரு பஸ்ஸில் ஏற்றிக்கொண்டு செல்லும் போது அவர்களது சூட்கேசும்பிறசாமான்களும்வைக்க இடமின்றிப் பெரும் அவஸ்த்தைக்குள்ளாக நேரிடுகின்றது. அல்லாமலும் அண்மையில் இரவு யாழ்ப்பாணப் புகைவண்டியில் வந்த பிரயாணிகள் சிலர் பஸ் இல்லாமல் அன்றிரவை புகையிரதநிலையத்திலும் பஸ்நிலையத்திலும் நேரத்தைப்போக்கவேண்டிய பரிதாபச் சம்பவம் ஒன்றும்நடந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

## பொலிகண்டி துப்பாக்கிச் சூடு

### கார் சொந்தக்காரர் விசாரணை

வல்வெட்டித்துறை, செவ்,

இம்மாதம் 15-ந் திகதி இரவு பொலிகண்டியில் கந்தவனம் பாலசிங்கம் என்ற நபரை துப்பாக்கியினால் சுட்டுக்கொலைசெய்ய உதவியளித்திருக்கலாமென்ற சந்தேகத்தின் பேரில் அப்பகுதியிலுள்ள மோட்டார்கார் உரிமையாளர்களையும் அதனையடுத்துள்ள கரணவாய்ப் பகுதி கார் சொந்தக்காரர்களையும் வல்வெட்டிதுறை பொலிஸ் நிலையத்திற்கு வரவழைத்து இன்ஸ்பெக்டர்கள் திரு. எஸ். ஸி. பத்திராஜா, திரு. செல்லையா ஆகிய இருவரும் விசாரணைசெய்து வருகிறார்கள்.

## பொதுக்கிணறுகள் தோண்ட முடிவு

கனகராயன்குளம், செவ்.

மன்றர் மாவட்ட மாந்தைப் பிரிவுக் காரியாதிகாரியின் கீழுள்ள எருவில், சிருட்டிகுளம் போன்ற இடங்களில் பொதுக் கிணறுகள் வெட்டும் பொருத்த வேலைகள், மாந்தைப்பிரிவு காரியாதிகாரியின் கீழுள்ள கிராமமுன்னேற்றச் சங்கங்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இக்கிணறுகள் வெகு விரைவில் கட்டுவதற்கான ஆக்கவேலைகளை மாந்தைப் பிரிவு கிராம முன்னேற்ற உத்தியோகஸ்தர் திரு ஈ. பேக்மன் என்பவர் எடுத்துள்ளார்.

## ஒரு பதவிக்கு 30 பேர் போட்டி

இமையாணன், செவ்.

பருத்தித்துறை சுங்கவரி இலாகாவில் ஒரு சாதாரண காரியாலய தொழிலாளிக்கு முப்பதுக்கும் அதிகமானோர் போட்டியிட்டனர், இன்று இதற்காக நடைபெற்ற நேர்முகப்பரீட்சையில் சிரேஷ்டதராதரமும் அதற்குக்கூடிய தராதரங்களுமுடைய பலர் தோற்றினார்கள். இவர்களில் ஒருவர் மட்டுமே இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டார்.

## விவசாயிகள் புகார்

கனகராயன்குளம், செவ்.

வவுனிக்குளத்தின் தண்ணீர் நீர் மட்டம் குறைந்து காணப்பட்டபடியால், நீர்ப்பாசன இலாகா, கமங்களுக்கு அளவாகவே நீரைக் கொடுத்து வருகின்றது. இதனால் விவசாயிகள் அனேகர் தங்கள் கமங்களுக்கு தண்ணீர் பாய்ச்சப்படவில்லையென நீர்ப்பாசன பொறியியலாளருக்கு புகார் செய்துள்ளார்கள்.

## நாட்டிலும் நரிலும்

'ஐயா, நிகழ்ந்துவிட்டது ஓர் அதிசயம், வந்துவிட்டது குடி மோசம்!' என்று மிக்க பரபரப்புடன் கூறினார் நிருபர் அவரை உட்காரவைத்து ஆசுவாசப்படுத்தி 'என்ன அதிசயம் நிகழ்ந்துவிட்டது, ஆண்டவனே!' என்று இதமாகக் கேட்டேன்.

'ஐயா, எங்கள் வட்டாரத்தில் ஒரு பெண்ணுக்கு மீசை முளைத்துவிட்டது, இன்னொரு பெண்ணுக்கு தாடி அரும்பிவிட்டது!' என்று வியர்வை சிந்த, நாக்குளற, மயிர் சிலிர்க்க நிருபர் கொன்னை தட்டினார்.

'பூஹ, இவ்வளவுதானா? இதிலென்ன அதிசயம், ஆண்டவனே! என்றேன். அவருக்கு நாடி விழுந்துவிட்டது. தாம் சொன்ன செய்தியை கேள்விப்பட்டவுடனே நான் மூர்ச்சை போட்டு அவருடைய மடியில் விழுந்துவிடவில்லை என்று அவருக்கு பெரும் ஏமாற்றமாய்போய் விட்டதுபோலும்.

கொழும்பு மாநகரத்திலே நாகரீகச் சின்னமென விளங்கும் மேல் வகுப்பு நாரிமணிகள் 'வேண்டாத ரோமத்தை அகற்றுவதெப்படி?, என்ற நூலை அறையைப்பூட்டி உள்ளுக்கிருந்து கொண்டு படித்து மனப்பாடப் செய்வதையும், கணவன்மாருக்குத் தெரியாமல் இரகசியமாக பூச்சு மருந்துகளை வாங்கி இரவில் மேலுதட்டில் தீப்பொறி பறக்கத் தேய்ப்பதையும் அந்த சிகிச்சைக்குப் சொல்வழி கேட்காமல் மெதுவாக எட்டிப்பார்க்கும் மயிர்த் தும்புகளை முகப்பூச்சினால் அப்பி மூடி மறைப்பதையும் நிருபர் கண்டிலர் போலும்.

பெண்களுக்கு மீசை தாடி வளர்வதில் என்ன அதிசயம் என்று கேட்கிறேன். அவர்கள் தான் இக்காலத்தில் எல்லா வகையிலும் ஆண்களோடு சரிநிகர் சமானமாக இருக்க வேண்டுமென்று சத்தம் போடுகிறார்களாச்சே! தங்களை ஆண்களிலிருந்து பிரித்துக் காட்டும் இந்த பாழாய்ப் போன மீசையை கடவுள் தங்களுக்கு கொடுக்காமல் விட்டதுபற்றி அவர்கள் சதா தங்களுக்குள்ளே கறுவிக்கொள்ளுகிறார்கள் என்று எனக்கொரு சமுசயம்.

ஆண்களைப் போல தாங்களும் காட்சியளிப்பதற்கு எத்தனை ஜோடனைகள் போடுகிறார்கள்! 'பதினொன்று'க்குள் கால்களை நுழைக்கிறார்கள், 'காலர்' ஷேட் போடுகிறார்கள், சிகரெட் சுருட்டு பற்றவைக்கிறார்கள், கூந்தலை வளர்ப்பதற்கு பதிலாக ஒட்ட வெட்டி 'குறொப்' வைத்துக்கொள்கிறார்கள். (கூந்தல் வளரும் தைலங்களுக்கு இப்பொழுது மார்க்கட்டில் கிராக்கி குறைந்துவிட்டது இதனாலன்றோ.) இன்னும் என்னென்னவோ எல்லாம் செய்கிறார்கள்.

பெண்கள் ஆண்களைப் போல விளங்க விரும்புவது ஒரு பருவகாலக்கோளாறு என்றும், இன்னும் சில காலம்போக இந்த பாஷன் மாறி அவர்கள் மீண்டும் பெண்மைக்கோலத்தையே விரும்புவார்கள் என்றும்ஓர் அமெரிக்க பேராசிரியர் கூறுவது அளவு மிக்க பொறுமையினால் தான் என்பது என்னுடைய அபிப்பிராயம். 'எல்லாம் தலைவிதி விசம்' என்று நாம் கூறிக்கொள்வதுபோல அவரும், பாவம், போகப் போக எல்லாம் சரிவரும் என்று காலத்தின் தலையில் பாரத்தைப்போடுகிறார்.

ஆண்கள் முழுசாக பெண்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பதுளையில் நடைபெறும் தமிழ் விழா

## மா. பொ. சி. கலந்து கொள்கிறார்

பதுளை, செவ்

மலையக கலை இலக்கிய மன்றம் 'அல்லி' ஆதரவில் இம்மாதம் 30-ம் திகதி சனிக்கிழமை பதுளையில் நடைபெறும் தமிழ் விழாவில் சிலம்புச் செல்வர் திரு. மா. பொ. சிவஞான கிராமணியார் கலந்து கொள்வார்.

பதுளை சரஸ்வதி மகாவித்தியாலய மண்டபத்தில் நாவலர் அரங்கில் 30-ம் திகதி சனிக்கிழமை மாலை ஆரம்பமாகும் இத் தமிழ் விழாவை பதுளை நீதிபதி எம் சண்முகலிங்கம் ஆரம்பித்து வைப்பார்.

திரு. கே. எஸ். நடராசா தலைமை வகிப்பார்.

**நிகழ்ச்சிகள்**

தமிழ்த் தாய் வணக்கம்: பதுளை தமிழ் மகளிர் உயர்தர பாடசாலை மாணவிகள், வரவேற்புரை: அ. க. முருகேசு (விழாக் குழுத் தலைவர்), தலைவர் முன்னுரை.

**விரிவுரைகள்**

''கம்பன் கவிநயம்'': சைவப் புலவர் நா. பொன்னையா. ''இலக்கிய இன்பம்'': பிரம்ம ஸ்ரீ சிவஞானச் செல்வக் குருக்கள், ''வள்ளுவன் கண்ட பெண்மை'': செல்வி சற்சொரூபவதி நாதன், ''பாரதியின் கனவு'': இரா. சிவலிங்கம், ''வள்ளுவன் வகுத்த அரசியல்'' செ. இராசதுரை எம். பி, ''நாடகத் தமிழ்'': பிரபல நாடக நடிகர் டி. கே. சகோதரர் ஒளவை சண்முகம், நாடகச் சிலம்பு: சிலம்புச் செல்வர் ஸ்ரீ ம. பொ. சிவஞான கிராமணியார்.

**கலை நிகழ்ச்சிகள்**

இன்னிசைக் கச்சேரி: இராமநாதபுரம் சமஸ்தான வித்துவான் சி எஸ். சங்கரசிவம் பாகவதரின் சிஷ்யை திருநெல்வேலி சங்கீத பூஷணம் திருமதி இந்திரா பாலசுப்பிரமணியம், வில்லுப் பாட்டு: மட்டக்களப்பு மாஸ்டர் சிவலிங்கம் கோஷ்டியினர்.

—

# 'எதற்கும் ஆண்டவன் துணை வேண்டும்'

சுழிபுரம், செவ்வாய்

முத்தியை அடைவதற்குத் தான் கடவுளை வணங்க வேண்டும் என எண்ணியவர்கள் மத்தியில், உலகில் வாழ்வதற்கும் கடவுளை வணங்க வேண்டும், என போதித்து தனது வாழ்வு மூலம் எமக்கு போதித்தவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். உலக இன்ப துன்பங்களை நாம் அனுபவித்தாலும் எமது நியதிப்படி ஆசைகளை நிறைவேற்றவேண்டும். திசை காட்டும் முள் வடக்குப் பக்கத்தை காட்டிக் கொண்டு இருப்பதுபோல் எமது வாழ்வின் நோக்கு இருக்கவேண்டும். அப்பொழுதுதான் நாம் சிறப்படையலாம் என சுழிபுரம் அறுபத்திமூவர் குருபூசை மடத்தில் நடைபெற்ற சுந்தரமூர்த்திநாயனர் குருபூசை வைபவத்தின்போது சிறப்புரை நிகழ்த்திய சைவப் புலவர் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்கள் எம்மையெல்லாம் பலவகையான கேள்விகளைக் கேட்கின்றார்கள். சுந்தரர் இரண்டு பெண்களை காதலித்தது பெரும் தவறுகும் என்றும், கடவுளை தூதாக அனுப்பியது சரியில்லையெனவும் வாதிக்கின்றனர். அவர்கள் கேட்பதில் நியாயம் காணப்பட்டாலும் ஒன்றுமட்டும் பெரும் உண்மையாகும். சுந்தரர் வாழ்வு, அவர் காட்டிய வழி ஆகிய இரண்டும் போதியவற்றை கற்பிக்கின்றன ஆசையை நிறைவேற்ற ஆண்டவன் துணை வேண்டும் நாம் வாழ ஆண்டவன் ஆசி வேண்டும். இவற்றை சுந்தரர் உலகுக்கு எடுத்துக்காட்டியுள்ளார்.

விழாவுக்கு சு. சண்முகரத்தினசர்மா தலைமைவகித்தார்.

—

# காரைநகரில் பஸ் பிரயாணிகள் சங்கம்

காரைநகர், திங்கள்

காரைநகர்-யாழ்ப்பாணம் பஸ் சேவைகள் நாளுக்கு நாள் சீர்குலைந்து வருகின்றன. நேர அட்டவணைப்படி பஸ்கள் ஓடாமையாலும், நல்ல நிலைமையில் இல்லாத பஸ்கள் இடைவழியே நின்று பிரயாணிகளுக்கு கஷ்டம்கொடுத்து வருவதாலும் துன்பப்படும் பிரயாணிகள் காரைநகர்—யாழ்ப்பாணம் பஸ் பிரயாணிகள் சங்கத்தை ஸ்தாபித்துள்ளனர்.

நேற்று சைவமகாசபைக் கட்டடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பின்வருவோர் இச்சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. கா. முத்தையா, உபதலைவர்: திரு. செ கனகசபை, காரியதரிசி: திரு சர்மா, உபகாரியதரிசி; திரு. இ கனகசபாபதி, உபதனாதிகாரி: திரு. மு சத்தியநாதன், செயற்குழு: திரு. கு இராசையா, திரு. ச. செல்லத்துரை, செல்வி க. பூரணம்.

—

# வியட்னும் ஒருமைப்பாட்டு தினக்கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

''வியட்னுமியப் பொது மக்களது சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக மாத்திரமல்ல, தென் கிழக்காசியா முழுவதின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காகவும் வீரத்தனமாகப் போராடி வருகிறார்கள்'' என்று யாழ். பிரதேச கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் திரு. ஐ. ஆர். அரியரெத்தினம் சமீபத்தில் நடைபெற்ற வியட்னும் ஒருமைப் பாட்டுத் தினக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் திரு எம். சி. சுப்பிரமணியம், முற்போக்கு எழுத்தாளர் திரு. டொமினிக் ஜீவா உட்படப் பலர் பேசினர்.

—

# யாழ் முஸ்லிம் இக்பால் இளைஞர் இயக்கம்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் முஸ்லிம் இக்பால் இளைஞர் இயக்கம் நேற்று முன்தினம் புனருத்தாரணம் செய்யப்பட்டது.

பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர் எம். எஸ். கலால்தீன், உபதலைவர்: எம் ஏ. சி. எம். சமீம், காரியதரிசி; என். எம். தாஸ், உபகாரியதரிசி: பி. எம். ருசீக், தனாதிகாரி: எம், மஹுறூப், உபதனாதிகாரி: எம். எஸ். எம். சலீம்கான்.

—

# காமராஜர்

மாஸ்கோ, ஜுலை 26

ரஷ்யாவில் சுற்றுவிஜயம் செய்யும் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜர் நேற்று வீரம் செறிந்த வால்காகிராட்டுக்கு வந்துசேர்ந்தார். இங்கு அவர் ஒருநாள் தங்கியிருப்பார்.

# புங்குடுதீவில் மாமண்டபம்

யாழ்ப்பாணம், செவ்.

புங்குடுதீவில் பொதுத் தேவைகளுக்கு உகந்த வகையில் ஒருமுறையான மாமண்டபத்தை நிறுவ புங்குடுதீவு மகாவித்தியாலய பெற்றோர்-ஆசிரியர் சங்கம் முடிவு செய்துள்ளது.

மகாவித்தியாலய அதிபர் திரு. சு. வில்வரத்தினம் தலைமையில் கூடிய சங்கச் செயற்குழுக் கூட்டத்தின் போது செப்டம்பர் முற்பகுதியில் பெற்றோர் தினத்தைச் சிறப்பாக நடாத்துவதெனவும் அதில் கதம்ப நிகழ்ச்சிகள், மாணவர்க்குப் பரிசில் வழங்கல் ஆகியவற்றுடன் விசேஷ அம்சமாய் ஒரு விஞ்ஞான பொருட்காட்சியை நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

—

# சங்கத் தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், செவ்.

அகில பிராமண குரு சமூக சேவா சங்கத்தின் விசேஷ மஹாசபைக் கூட்டம் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள் தலைமையில் நடைபெற்றுக் கீழ்க்காணும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

எதிர்வரும் ஆவணி முதலாந் தேதி தொடக்கம் வேத அத்தியயன பாடசாலை ஒன்றினை ஆரம்பித்து செவ்வனே நடாத்துதல்

சங்க நலன் குறித்து அங்கத்தவர்கள் தமது வருட சந்தாவை, ஆயுள் சந்தாவாக மாற்றி ஒரு வருடத்திற்குள் 4 தவணைகளில் ரூ. 100/- கொடுத்தல்.

ஆயுள் சந்தா மூலம்வரும் பணத்தை ஒரு நிதியாக்கி அதனை நிர்வாக சபையின் தீர்மானப்படி நிருவகிப்பதேயல்லாமல் சங்கச் செலவிற்கு எடுக்காதிருத்தல்.

சங்கத்தின் வருடாந்த மகாநாடு ''காயத்திரீ பீடத்தில்'' எதிர்வரும் ஆவணி மாசம் நடாத்துதல்.

—

# திருமுறை வகுப்பு ஆரம்பம்

சங்கானை, செவ்வாய்

சித்தன்கேணி வட்டுக்கிழக்கு மாதர் சங்க ஆதரவில் நடைபெறும் இலவசத் திருமுறை வகுப்பு சென்ற வெள்ளிக்கிழமை சங்க மண்டபத்தில் செல்வி ஏ. தெய்வானைப்பிள்ளை தலைமையில் ஆரம்பமாயது. ஆரம்பத்தில் பண்டிதை நா. பாக்கியம் ''பெரிய புராணத்துப் பெண்கள்'' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றினார். பின்னர் ஆசிரியர் சங்கீத பூஷணம் திரு. ப. முத்துக்குமாரு சர்மாவினால் சம்பிரதாய முறைப்படி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

—

# மின்சாரக்கோளாறு காரணம்

யாழ்ப்பாணம், செவ்.

மின்சாரத்தடை காரணமாக யாழ்ப்பாணம் தபால் கந்தோரில் தந்திப்பகுதியில் வேலைகள் அடிக்கடி ஸ்தாம்பிப்பதாக அறியப்படுகிறது.

தபால் பகுதிக்கு தனியாக மின்சார அமைப்பு இருந்த போதிலும் தந்திகளைக் கிரகித்து விநியோகிக்கும் அறையில் அடிக்கடி மின்சாரக் கோளாறுகள் ஏற்பட்டு தொல்லை தருவதாகவும் அதனால் அதிமுக்கிய தந்திகள் கூட தாமதமாகி [illegible] கின்றது.

# "வெளிநாட்டில் வாழ்ந்தாலும் தாய் நாட்டுப் பற்று அகலவில்லை"

## வரவேற்பு [illegible]ழாவில் பேச்சு

சுழிபுரம், செவ்.

''தென்கிழக்காசியாவில் நாகரீகம் மிக்க நாடாகத் திகழ்வது மலேயா. சிங்கப்பூர் சிறிய நாடாக இருந்தாலும் அது ஓர் சிறப்புமிக்க நாடாகும்'' என்று சிங்கப்பூர் பிரதிநிதியாக நுவரெலியா ஆசிய பிராந்திய ஐக்கிய மகாநாட்டில் பங்குபற்றிய திரு. பண்டாரப் பிள்ளை வேலுப்பிள்ளைக்கு அளிக்கப் பட்ட ஓர் வரவேற்பு விழாவில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, வட்டுக் கோட்டைக் கிளை சமூக சேவைப் பகுதியினரால் கிளை காரியாலயத்தில் நடாத்தப்பட்ட விழாவுக்கு திரு. சி மு. வன்னியசிங்கம் தலைமை வகித்தார்.

திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் மலாயாவுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற தமிழ் மக்கள் மிக்க சிறப்புடனும், பல முக்கிய அரசாங்க பதவிகளை வகிப்பதையும் காண முடிகின்றது. பெரிய பதவிகளை வகித்தாலும் தம் பண்பை மறக்காது கட்டிக் காத்து வருகின்றனர். தம் தாய்நாட்டுப் பற்றை எவ்வாறு பாதுகாக்கின்றனர் என்பதை அவர்கள் அங்கு நடாத்தும் ஒவ்வொரு மதமொழி இயக்கங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம் என்று கூறினார்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில் மலேசியாவில் நடைபெற்ற தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுக்கு சென்ற போது அங்குள்ள பல தமிழ் அறிஞர்களுடனும் தமிழ் பேசும் எமது இனத்தவருடனும் கூடிக் குலாவும் வாய்ப்பு ஏற்பட்டது. அப்போது எமது நாட்டைச் சேர்ந்தவர்கள் தமது தாய் நாட்டின் மேல் வைத்திருக்கும் மதிப்பை காணமுடிந்தது. யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சமய நிகழ்ச்சிகள் போல் அங்கும் நடைபெறுவதை கண்ணுற்றேன்'' என்று கூறினார்

திரு பண்டாரப்பிள்ளை வேலுப்பிள்ளை தமக்களித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் தாம் மலேசியாவில் உயர்ந்தவனாக வாழ்ந்தாலும் தமது தாய் நாட்டை ஒருபோதும் மறக்கவில்லை, என்றும் தாம் தாய் நாட்டில் பெற்ற அடிப்படைக் கல்வி தான் தமது வாழ்வுக்கு வழிகாட்டியதாகும் என்றும் கூறினார்.

—

# இந்திய-இந்தோ. நல்லுறவு

புதுடில்லி. ஜுலை 26

இந்திய மக்களுக்கும் இந்தோனேஷிய மக்களுக்குமிடையே எப்பொழுதும் நல்லுறவு இருந்து வந்திருக்கிறதெனவும், ''எமது இரு அரசாங்கங்களுக்குமிடையேயுள்ள தொடர்புகளைப் பலப்படுத்த நாம் எம்மாலான முயற்சியை எடுத்து வருகிறோம்'' எனவும் வெளிவிவகார ராஜாங்க மந்திரி திரு. தினேஷ்சிங் லோகசபையில் நேற்று தெரிவித்தார்.

கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், இந்தியாவுடன் உள்ள உறவைப்பலப்படுத்த இந்தோனேஷியாவுக்குள்ள விருப்பத்தை இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி மூலமும், தூதரகத் தொடர்பு மூலமும் இந்தோனேஷியா தெரிவித்துள்ளது எனவும் அவர் கூறினார்.

(பி. ட். ஐ.)

# காரைநகர் ரயில்பிரயாணிகளுக்கு விசேஷ வசதிகள்

தெஹிவலை. செவ்.

கொழும்பு மற்றும் தூர இடங்களிலிருந்து உத்தர தேவியில் வரும் காரைநகர் பிரயாணிகள் பஸ் கிடைக்காததால் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் செலவிலும் அதிகமான பணத்தைக்கொடுத்து யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகருக்குச்செல்ல வேண்டியிருக்கிறது. இதுபற்றி கொழும்பு காரைநகர் அபிவிருத்திச் சபை இ. போ. ச.விற்கு மகஜர் மூலம் தெரிவித்ததைத்தொடர்ந்து யாழ்ப்பாணம் இ. போ. ச. மனேஜர் உத்தரதேவி பிந்திவரும் நாட்களிலும் பஸ் கிடைக்க ஒழுங்குகள் செய்துள்ளார்.

காரைநகரில் விரைவில் ஒரு நவீன தபாற் கந்தோர் அமைக்கப்படும் என யாழ்ப்பாண அரசாங்க அதிபர் காரைநகர் அபிவிருத்திச் சபைச் செயலாளர் திரு. க. க. சுப்பிரமணியத்திற்கு அறிவித்துள்ளார்.

—

# சங்கத்தின் முயற்சி பலனளித்தது

யாழ்ப்பாணம். புதன்

யாழ்ப்பாண கல்வி அலுவலகத்திற்கு ஓர் நிர்வாக உதவியாளர் தேவை என்பதை யாழ். அரசாங்க லிகிதர் சங்கம் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து பொது சேவைக் கமிஷன் திரு. பி. பி. ஏ. தம்பிநாயகத்தை நிர்வாக உதவியாளராக உடனடியாக நியமித்துள்ளது. திரு தம்பிநாயகம் இம்மாதம் 22-ந் திகதி தொடக்கம் இப்பதவி பொறுப்பை ஏற்றுள்ளார். இப்பதவி பல வருடமாக காலியாகவே இருந்து வந்தது. சங்கத்தின் வற்புறுத்தலின் பெயராலேயே இப்பதவி நிரப்பப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

—

# நாட்டிலும் . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களாவதும் பெண்கள் முழுசாக ஆண்களாவதும் இந்தக் காலத்தில், இ. போ. ச பஸ் நேரத்துக்கு வருவது போல, சர்வசாதாரணமாகி விட்டது. ஆண், பெண் பரிவர்த்தனை இப்படி முழுசாக நடக்கும் போது பெண்களுக்கு மீசை முளைப்பதில் என்ன ஆச்சரியமிருக்கிறது? பெண் மீசை கிசு கிசுவென்று மேலோங்கிவளரட்டும், பெண் தாடி மள மளவென்று கீழோங்கி வளரட்டும்! எங்கள் அபிமான சினிமா நடிகைகளை மீசையுடன் காணும் நன்னாள் என்னாளோ!

அன்பிற்குரிய பெண் குலமே! உன் மீசை தாடி நீடூழி வாழ்வதாக! அப்பொழுது தான் ஆண்களுடன் போட்டிபோட்டு கீழே விழுந்து விட்டாலும் 'மீசையில் மண்படவில்லை' என்று ராங்கியுடன் கூறலாம்!

வழிப்போக்கன்.

# சிறுவர்கள் கைது

ஏழு வயது முதல் பன்னிரண்டு வயதுவரையுள்ள 50 சிறுவர்களை சென்னை மத்திய ரயில் நிலையத்தில் பொலிசார் கைதுசெய்தனர் இவர்கள் டிக்கேட் இல்லாமல் ரயிலில் பிரயாணம் செய்தார்கள். இச்சிறுவர்கள் எழும்பூர் அனாதைச் சிறுவர் விடுதிக்கு அனுப்பிவைக்கப் பட்டனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாடும் நாமும்

# கூ. மொ. வி.க்கு ஓர் ஆலோசனைச் சபை

கூ. மொ. வி. பரவலாக அமைக்கப்படும் பிரிவுகளுக்கு வேண்டிய இறக்குமதிப் பொருட்கள் யாவும் நேரடியாகவும் அம்மையிலுள்ள துறைமுகத்தின் மூலமுமாக இறக்குமதி செய்யப்படல் வேண்டும். என்ன பொருட்கள் இறக்குமதியாக்கப்படல் வேண்டும் என்ற விபரமும் மற்றய இறக்குமதி தொகை விபரங்களும் நேரடியாகவே இப்பிரிவினால் செய்யப்படவேண்டும். இந்த நிலையத்தில் வேலை செய்வதற்கான ஊழியர்களும் நிர்வாகிகளும் அந்தந்த இடங்களிலிருந்து நியமிக்கப்படுதல் வேண்டுமென்ற கொள்கையினால் வேலையில்லாத் திண்டாட்டமும் குறைவதற்கு இம்முறை வாய்ப்பளிக்கும். கூ. மொ. வி. ஸ்தாபனத்திற்கு வர்த்தக மந்திரி, உள்நாட்டு மந்திரி, நிரந்தரக் காரியதரிகள் உட்கொண்ட ஒரு ஆலோசனைச்சபை நிறுவப்படல் வேண்டும். நிர்வாக சீர்திருத்தங்களையும் ஊழியர்களின் சம்பள பட்டியல் போன்ற யாவும் இச்சபையினாலேயே அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

குறிப்பிட்ட சபைகள் அடிக்கடி சந்தித்து அவ்வப்போது எழும் பிரச்னைகளை நன்றாக ஆராய்ந்து நல்ல முடிவிற்கு வரவேண்டும். இதனால் பாவனையாளர்கள் பொருட்களை நியாயமான விலையில் வாங்குவதற்கும் கள்ளச்சந்தையை நாடாதிருக்கவும் சந்தர்ப்பமளிக்கும் இந்த சீர்திருத்தங்களும் மாற்றங்களும் கூ. மொ. வி. இறக்குமதி செய்யும் பொருட்களை சிறந்த முறையில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்வதற்குவாய்ப்பளிப்பதுடன் வாழ்க்கைச் செலவை குறைக்கவும் வழிவகை செய்யும்.

மேலும் இத்திட்டத்தில் பொதுமக்களும் பங்கு பற்றிக்கொள்ளும் முறையில் கூ. மொ. வி. ஸ்தாபனத்தை ஒரு பொது கூட்டு ஸ்தாபனமாக்கி 51 விகிதமான பங்குகளை அரசாங்கமும் 49 விகிதமான பங்குகளை பொதுமக்களும் முதலீடு செய்ய சந்தர்ப்பம் அளிக்கலாம். இப்படியான நன்மை பயக்கக்கூடிய உருப்படியான திட்டங்களில் பொதுமக்கள் கட்டாயமாக தங்கள் கடமையைச் செய்வார்கள் என்பது திண்ணம். ஒவ்வொரு பிரிவிலுமுள்ள நிர்வாகிகள் தங்கள் கடமைகளை அவர்களே முழுப் பொறுப்புடனும் செய்வதா. ஒவ்வொரு பிரிவிலும் கட்டுப்பாட்டையும் சிறந்த மேற்பார்வையையும் நாம் எதிர்பார்க்கலாம். அப்பிரிவிலுள்ள தலைவரே நிர்வாக அமைப்பிற்கும் நாளாந்தம் செயலாற்றவேண்டிய திட்டங்களுக்கும் பொறுப்பானவராகின்றார்.

கூ. மொ. வி பரவலாக அமைக்கப்படுவதால் பொருட்கள் சிறந்த முறையிலும் குறுகிய கால எல்லைகளுக்குமிடையில் விநியோகம் செய்ய முடிகின்றது. இத்திட்டத்தின் பிரகாரம் வேலையில்லா திண்டாட்டத்தையும் நாம் ஓரளவிற்கு குறைத்துக்கொள்ளலாம். இன்று வேலைவாய்ப்பு தேடி தங்கள் சொந் இடங்களை விட்டு எத்தனையோ பேர் கொழும்பிற்கே செல்கின்றனர். அப்படி சென்றவர்கள் தானும் ஒரு வேலையை பெற்றுவிட்டால் அவர்களால் தாங்கள் பெறும் ஊதியத்துடன் செலவுகளை சமாளிக்க முடிவதில்லை. வாழ்க்கைச் செலவு, வீட்டு வாடகை போன்ற செலவுகளினால்

**— எஸ். கே. ரி. —**

அவர்கள் பணக்கஷ்டம் அடையவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. ஆனால் தற்பொழுது உத்தேசித்த கூ. மொ. வி. பரவலாக்கப்பட்டால் அவ்வவ் இடங்களிலேயே வேலை வாய்ப்பு திட்ட வசதியளிக்கும். தற்பொழுது அரசாங்கமும் தனியார் துறையினரும் கொழும்பிலேயே தங்கள் நிறுவனங்களையோ அல்லது தொழிற் சாலைகளையோ நிறுவி வருகின்றனர். ஆனால் கூ. மொ. வி. போன்ற ஸ்தாபனம் ஒரு விநியோகம் செய்யும் நிறுவனமாகவே இருந்து வருகின்றது. ஆகை [illegible]

(7-ம் பக்கம் பார்க்க)

## நாடுவாழ நாமுழைத்தால் .... !

உழைக்காமல் பிறர் சொத்தால் வாழ்வ தென்றால்
உண்மையான வாழ்க்கைக்குப் பொருளே இல்லை.

"உழைக்கவேண்டும், நம்நாடு செல்வ மெங்கும்
தண்ணீராய்ப்பாயவேண்டும்'' என்று நாளும்

மழைகண்டு கத்துகின்ற தவளை போன்று
மக்களெல்லாம் பேசுவதாற் பயனே இல்லை!

சளைக்காமல் கழனியிலே வேலை செய்தால்
சருகாகும் வறுமையெல்லாம் பொய்மை இல்லை!

சிறு கிராமத் துள்ளோர்கள் கல்வி கற்றுச்
சிறப்புமுறை பலவற்றைக் கைப்பிடித்துத்

திறமையுடன் தொழில்களையே செய்துவந்தால்
தீராத துன்பங்கள் நாட்டில் இல்லை.

பெருமையுடன் நம் நாடு பாரின் முன்னே
பீடு நடைபோட வேண்டும் என்று சொன்னால்

கருமுகில்போல் கடமை மழை பெய்து நாட்டைக்
காக்கவேண்டும். இல்லையெனில் பெருமை இல்லை!

உலகிற்கே தந்தையான காந்தித் தாத்தா
உயர்வான வாழ்விற்குச் சொல்லி வைத்த

மலர்போன்ற மணம்மிக்க கொள்கையெல்லாம்
மக்களெல்லாம் கொள்ளாவிடின் உயர்வே இல்லை.

சிலர் வாழ்வில் பொய்மையினால் நன்கு வாழ்தல்
சிலகாலம் மட்டுந்தான்; மயக்கம் வேண்டாம்.

பலர்வாழ நாடு வாழ நாமுழைத்தால்
பாரினிலே நமக்கிணைதான் யாரும் இல்லை!

—சிறுமதுரைச்செல்வி - கிராமநலம்.

'யாழ்ப்பாணன்' என்ற பெயர் தமிழ்கூறும் நல்லுலகம் அனைத்தும் தெரிந்த பெயர். இந்தப் பெயருக்குரியவர்தான் கணித நூல்களையும் மற்றும் பாட நூல்களையும் எழுதியவே. சிவக்கொழுந்து என்பதை பாடசாலைப் பிள்ளைகள் தெரிந்திருந்தால் நிச்சயம் அவரது கவிதைகளை படித்திருக்கமாட்டார்கள் (கணிதம் என்றால் பலருக்கும் கடினமான விஷயம் தானே) 'யாழ்ப்பாணன்' 'ஜீவயாத்திரை' என்ற நவீனம் ஒன்றை எழுதி முடித்துள்ளார் அதுவிரைவில் வெளிவரவிருக்கிறது. நமது நாட்டின் அன்றைய நிலை என்ன? இன்றைய நிலை என்ன? என்பதையும் அவர் அதில் குறிப்பிடுகிறார். 'நாடும் நாமும்' பகுதிக்கு மட்டுமல்ல நமது வருங்கால சந்ததியினருக்கும் பாடமாக அமையும் ஒரு பகுதியை இங்கு காண்க.

முற்காலத்திலெல்லாம் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பூஜையறை இருக்கும். அறையின் நடுவில் சுவாமியின் சொரூபம் இருக்கும். சுவர்களைச் சிவபெருமான், உமாதேவியார், விநாயகர், சுப்பிரமணியர். சரஸ்வதி, மகாலக்குமி படங்கள் அலங்கரிக்கும். தட்டத்தில் விபூதியிருக்கும். காலையிலும் மாலையிலும் வீட்டிலுள்ள தம்பி தங்கைமாரனைவரும் பூஜையறைக்குச் சென்று விபூதி தரித்துத் தேவார திருவாசகங்களோதி இறைவனை வணங்குவர். இன்று பூஜையறை சினிமாக்காட்சிசாலையாக மாறிவிட்டது. இலட்சிய நடிகரின் சொரூபமும் நடிகைகளின் திருவுருவப் படங்களுமே தம்பி தங்கைமாரின் பூஜையறைகளை அலங்கரிக்கின்றன. விபூதித் தட்டு இருந்த இடத்தைப் பவுடர் டப்பா ஆட்சி பிடித்துக்கொண்டது. தேன்நிலவும் சினிமாக்கதிருமே தேவார திருவாசக நூல்களின் இடத்தில் குந்திக்கொண்டன. பின்னர் அந்த வீட்டின் பக்திப் பரவசப் பெருக்கைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா?

# --- தந்தையருஞ் சொற்களைத்தான் ---!

— யாழ்ப்பாணன் —



தென்னா டுடைய சிவனே
போற்றி!
என்னாட் டவர்க்கும் இறைவா
போற்றி!

நீதான் துணை!
நீதான் வருங்காலச் சந்ததியைப் படுகுழியினின்றும் மீட்கவேண்டும்!

எந்நேரமும் தம்பிமாரின் திருவாயில் காதற் பாட்டுக்களும் எங்கும் எவ்விடத்தும் இழவு சினிமாப் பாட்டுக்களுமே ஒலிக்கின்றன. இன்று திருக்கோயில்களிலும் இதே பாடல்களை ஒலிபெருக்கியின் அலறுகின்றன.

காலம் மாறிவிட்டது. தம்பி நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய்க் குட்டிக்கடாவாக வளர்ந்து வந்தான். அன்னையானவள் அப்பனுக்குத் தெரிந்தும் சிலவேளை அப்பனுக்குத்தெரியாமலும் வேளைதவறாது நல்லுணவுகளைத் தம்பிக்கு ஊட்டி வந்தான். தம்பியும் ஒரு கவலையுமின்றி அன்னை ஊட்டிய நல்ல முட்டைகளையும் தின்பண்டங்களையும் வயிறு புடைக்கப் புடைக்க உண்டு குண்டோதரன் தம்பியானான், அவனுக்கு அவனுக்கேற்ற கூட்டாளிகளும் சேர்ந்து கொண்டனர். சேட்டும் தெறிபூட்டாது பறக்கச் சைக்கிளில் தம்பியும் நண்பனும் காற்றுவேகம் மனோவேகமாகப் பறப்பர். நண்பன் தான் 'புரூசைன' என்பான். தம்பி தான் 'புரூறஷ்யா' என்பான். இவ்வாறு நாஸ்திகத் தம்பியின் காலம் கவலையெதுவுமின்றிக் கழிந்துகொண்டிருந்தது.

அடே! மூளைகெட்ட பசாசே! நீ உன் சுயபுராணம் சொல்லப்போய்த் தம்பி புராணத்தில் இறங்கிவிட்டாயே என்று என்னை நீங்கள் அதட்டுகின்றீர்கள். ஆம்! எதுவோ மதியிழந்து ஆவேசத்தில் உளறிவிட்டேன். மன்னித்துக்கொள்ளுங்கள். தம்பிமாரை நினைக்க நினைக்க என் சுயபுராணம் தம்பிமாரின் சுயபுராணத்தில் சங்கமமாகி அவர்

(8-ம் பக்கம் பார்க்க)

# ருசியான தோடம்பழம் வேண்டுமானால்...

தோடங்கன்று தனிமணற்றரையோ புரைத்தரையோ அல்லது மக்கித தரையோ குறைந்தபட்சம் ஏழு அடி ஆழத்திற்கு இல்லா நிலத்திலே நாட்டப்படுதல்வேண்டும் சொல்லப்பட்ட இந்த ஆழத்தில் களி மண்படையோ இருக்கமண்படையோ இருத்தலும் விரும்பத்தக்கதன்று. கன்று நடுவதற்கான குழி, அரித்த மேற்படை மண்ணினாலும் நன்கு உக்கிய சேதனவுறுப்பு (கரிமப்பொருள்) பசளையாலும் ஆயத்தப்படுத்தல் முக்கியமாகும். நீரிறைப்பு வசதிகளும் வேண்டும். மரங்கள் பூத்துக் காய்க்கும் காலங்களில் மழைபெய்யாதிருத்தல் நலம். இவ்விதவானிலை புத்தளம் வடக்கு வட்டாரத்திலும், விற்பற்று வனவிலங்குக் காப்பு வட்டாரத்திலும், மன்னாரின் வடக்குப் பகுதியிலும், பூநகரிக் காரியாதிகாரியின் வட்டாரத்திலும், முல்லைத்தீவுக் காரியாதிகாரியின் வட்டாரத்தில் ஒரு பகுதியிலும் நிலவுகின்றது.

கன்றுநாட்டுவதற்குமுன்பதாக காட்டுமரக் கட்டைகளை அகற்றுதலும் தரையை மட்டுப்படுத்தலும் விரும்பத்தக்கனவாகும். நிலத்தைப் பண்படுத்தல், பசளையிடுதல், செயற்கையுரங்களை உபயோகித்தல் ஆகிய தொழின்முறைகளை கிரமமாகக் கையாளுதலால் அற்ப நோய்களையும் வைரசுகளையும் சகிக்குந் தன்மையை உடையதும் நீடிய வாழ்வுடையதுமான தோடஞ்சோலை நிலைபெறுதல் உறுதியாகும்.

கையால் தண்ணீர் ஊற்றுதல் அதிகமான சிரமச் செலவின்றி பயிருக்குப் போதிய நீர் கிட்டாது. பம்பின்மூலம் தெளிப்புமுறை நீர்ப்பாசனம் அல்லது மிதப்புவாய்க்கால் முறை நீர்ப்பாசனம் சிறந்ததெனக்கூறலாம்.

தோடைநாட்டுவோர் ஒவ்வொருவரினதும் தலையாய நோக்கம் கீர்த்திபெற்றநாற்றங்காலாளரிடமுகைவொட்டுக் கன்றுகளைபரிட்சர்த்த முறையிற்சிறந்ததாய் மரத்தின் அரும்புகளைக் கொண்டு ஒட்டப்பட்ட கன்றுகளை தேடிக் கொள்ளுவதாக இருத்தல் வேண்டும். முகையொட்டு அல்லது கிளையொட்டுக் கன்றுகளுட்சிறப்பானவை வசதிப்படாப்பட்சத்தில் மட்டுமே நல்ல தாய் மரங்களின் விதைக் கன்றுகளைத் தெரிந்தெடுத்தல்வேண்டும். பூச்சி புழு நோய் முதலியன தோன்றும் வண்ணம் காலத்துக்குக் காலம் மரங்களின்மேற் கவனம் செலுத்துதலும் உடனடியாகஏற்ற நடவடிக்கை எடுத்தலும் சிக்கனத்தைச் சிறப்பாக உயர்த்தும் கன்றுகளின் இளம் பருவத்திலிருந்து அவற்றை முறைப்படி வளர்த்தலும் நீர்முளைகளை அகற்றுதலும் அவசியம்.

காய்களைப் பறிக்கும் போது கிளைகளுக்குச்சேதம் விளைக்காமல் முற்றியதனித் தனிக்காய்களைக் கத்தரிக்கோல் போன்ற ஒருகருவியாற் கொய்தல் நலம் கிளைகளுட்பசுமையானவை காயப் படுத்தப்படுமாயின் அடுத்த போசத்தில் பூத்தல்குறைவுபடும்.

(ஆதாரம்—'கமத் தொழில் விளக்கம்')




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் யூனியனை மே. ஜெர்மன் தோற்கடித்தது

## உலக வெள்ளிக்கிண்ண இறுதிப்போட்டி ஜூலை 30-ல் நடைபெறும்

லண்டன், ஜூலை 26

**நேற்று லிவர்பூலில் நடைபெற்ற உலக வெற்றிக் கிண்ண உதைபந்தாட்ட அரை இறுதிப் (செமி பைனல்ஸ்) போட்டியில், ரஷ்யாவை மேற்கு ஜெர்மனி தோற்கடித்தது.**

மேற்கு ஜெர்மனி இரண்டு கோல்களும் ரஷ்யா ஒரு கோலும் போட்டிருந்தன.

இன்று செவ்வாய்க் கிழமை "வெம்ளியில்" இங்கிலாந்துக்கும் போர்ச்சுக்கல்லுக்குமிடையே அரை இறுதிப் போட்டி நடைபெறுகிறது.

இப்போட்டியில் வெற்றி பெறும் கோஷ்டியுடன் மேற்கு ஜெர்மன் கோஷ்டி இம்மாதம் 30-ம் திகதி மோதிக் கொள்ளும். முப்பதாம் திகதி நடைபெறுவது இறுதிப் போட்டியாகும். இப்போட்டியில் வெற்றி பெறும் கோஷ்டி இவ்வருட "உலக வெள்ளிக் கிண்ணத்தை" சுவீகரித்துக் கொள்ளும். வெள்ளிக் கிண்ணத்தை எலிஸபெத் மகாராணியார் வழங்குவார்.




# கூடைபந்தாட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ்வாய் யாழ். மாவட்ட பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்லூரிகளுக்கிடையேயான கூடைப் பந்தாட்டப் போட்டியில் இதுவரை முடிவுற்ற சில போட்டிகளின் விபரம் வருமாறு:-

## சென். பற்றிக்ஸ் வெற்றி

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் சென். பற்றிக்ஸ் கோஷ்டியினர் 29 புள்ளிகளும் கிறிஸ்தவக் கல்லூரி கோஷ்டியினர் 19 புள்ளிகளும் பெற்றனர். இப்போட்டியில் சென். பற்றிக்ஸ் வீரர்களான கனகசபை 12 புள்ளிகளும் சுவாம்பிள்ளை 8 புள்ளிகளும், ஜோர்ச் 2 புள்ளிகளும் பெற்றனர். கோப்பாய் வீரர்களான தேவராஜேந்திரன் 7 புள்ளிகளும், சுகுணசபேசன் 4 புள்ளிகளும் பாலகிருஷ்ண ராஜன் 4 புள்ளிகளும் முறையே பெற்றனர். இதில் சென். பற்றிக்ஸ் வெற்றிபெற்றது.

## சென். ஜோன்ஸ் வெற்றி

சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையே நடந்த போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி 37 புள்ளிகளையும், சென. பற்றிக்ஸ் கல்லூரி 17 புள்ளிகளையும் பெற்று சென். ஜோன்ஸ் வெற்றியீட்டியது. இப்போட்டியில் சென். ஜோன்ஸ் வீரர்களான ஜே. அல்போன்சஸ் 14 புள்ளிகளையும், எஸ். எம். முத்துத்தம்பி 5 புள்ளிகளையும் டி. ஜே. கணேஷ் 6 புள்ளிகளையும் எம். வி. மாதவன் 5 புள்ளிகளையும் ரி. கணேஷ் 2 புள்ளிகளையும் முறையேபெற்றனர். சென். பற்றிக்ஸ் வீரர்களான எப். கனகசபை 8 புள்ளிகளையும் எ. வை. சுவாம்பிள்ளை 4 புள்ளிகளையும் சி. ஜோர்ச் 2 புள்ளிகளையும் எஸ். முத்தலிங்கம் 2 புள்ளிகளையும் சத்தியநாதன் ஒரு புள்ளியையும் முறையே பெற்றனர்.

## யாழ்ப்பாணக் கல்லூரி தோல்வி

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் சென். ஜோன்ஸ் 29 புள்ளிகளும் யாழ்ப்பாணக் கல்லூரி 15 புள்ளிகளும்பெற்று சென். ஜோன்ஸ் யாழ்ப்பாணக் கல்லூரியைத் தோல்வியடையச் செய்தது. இப்போட்டி முடிவில் சென். ஜோன்ஸ் வீரர்களான எம். வி. மாதவன் 12 புள்ளிகளும், எஸ். எம். முத்துத்தம்பி 5 புள்ளிகளும், ஜே. அல்போன்ஸ் 4 புள்ளிகளும் முறையே பெற்றனர். யாழ்ப்பாணக் கல்லூரி வீரர்களான செபநாயகம் 8 புள்ளிகளும் பாக்கியநாதன் 4 புள்ளிகளும் பெற்றனர்.

## யாழ். மத்தியகல்லூரி வெற்றி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் மத்திய கல்லூரி 26 புள்ளிகளும் யாழ்ப்பாணக் கல்லூரி 22 புள்ளிகளும் பெற்று மத்திய கல்லூரி வெற்றியீட்டியது. இப்போட்டி முடிவில் யாழ். மத்திய கல்லூரி வீரர்களான சாந்திகரன் 10 புள்ளிகளும், குருநாதன் 8 புள்ளிகளும், ஜெயரெட்னம் 4 புள்ளிகளும் செல்லத்தம்பு 4 புள்ளிகளும் முறையே பெற்றனர். யாழ்ப்பாணக் கல்லூரிவீரர்களான செல்வநாயகம் 14 புள்ளிகளும் பாக்கியநாதன் 6 புள்ளிகளும் வோல்ரர் 2 புள்ளிகளும் பெற்றனர்.

## கிறிஸ்தவக் கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரிக்குமிடையே நடந்த போட்டி மிகவும் ரசிப்பாகவும் விறுவிறுப்பாகவும் காணப்பட்டது. இடைவேளையின்போது கோப்பாய் 9 புள்ளிகள் பெற்றிருக்க சென் ஜான்ஸ் 4 புள்ளிகள் பெற்றிருந்தது. இடைவேளைக்குப் பின்னர் தான் சென்ஜோன்ஸ் வீரர்களிடம் ஒரு புது உற்சாகமும் சுறுசுறுப்பும் காணப்பட்டது. போட்டி முடிவில் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி 20—17 புள்ளிகளால் சென்ஜோன்ஸைத் தோற்கடித்தது. இப்போட்டியில் சென்ஜோன்ஸ் வீரர்களான எஸ் எம் முத்துத்தம்பி 9 புள்ளிகளும் எம். வி. மாதவன் 2 புள்ளிகளும், ஜே. அல்போன்சஸ் 6 புள்ளிகளும் முறையே பெற்றனர். கோப்பாய் வீரர்களான தேவராஜேந்திரன் 6 புள்ளிகளும், பாலகிருஷ்ணராசா 6 புள்ளிகளும், ஆர். சுகுணசபேசன் 4 புள்ளிகளும், நவரெத்தினம் 2 புள்ளிகளும், யோகேஸ்வரன் 2 புள்ளிகளும் முறையே பெற்றனர்.

இப் போட்டிகள் யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.




எனக்கு

மிகவும்

பிரியமானது

கன்டொஸ்

உயர்ந்த ரகச் சொக்கலேற்று




ஏகவிநியோகஸ்தர்கள்:

ஷோ வலஸ் அன் ஹெஜெஸ் லிமிட்டெட்,

கொழும்பு - 3.





## கொழும்பு

புதன் 27 - 7 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**

6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானப், 1-00 தப்ட இசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-15 படத் விருந்து.

இரவு 6-15 கிராமசங்கிலை, 7-30 பேச்சு, 7-45 இசைத்தட்டுச் சங்கீதம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி 9-15 வீணை, 9-30 பாட்டு 10-00 நேயர்விருப்பம்.

## கூ: மோ. வீ...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மென்பது தெரியவில்லை. இந்த ஸ்தாபனம் பரவலாக்கப்பட்டால் கண்டி, குருணகல, பதுளை, யாழ்ப்பாணம், திருக்கோணமலை, காலி போன்ற இடங்கள் அபிவிருத்தியடையவும் மக்கள் தங்கள் தேவையான பொருட்களை வாங்கவும் செல்வார்கள். இதனால் இப்பட்டினங்கள் பேணும் வளர இடமுண்டு. காலி, திருக்கோணமலை, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் இந்த உத்தேசத் திட்டம் இவ்விடங்களை சிறந்து துறைமுகமாக்கவும் அபிவிருத்திக்கும் நல்ல நிலைமையை உண்டாக்கும். இறக்குமதிப் பொருட்கள் நேரடியாக இத்துறைமுகங்கள் மூலம் இறக்குமதி செய்யப்பட்டால் அரசாங்கம் சில அத்தியாவசியமான சுங்கப் பகுதி, இறக்குமதிப் பகுதி, துறைமுகக் கட்டுப்பாட்டுப் பகுதி போன்ற பல கிளைக்களங்களை நிறுவவேண்டி நேரிடும். இவற்றை அரசாங்கம் செய்தால் தனியார் துறை ஸ்தாபனங்களும் தங்கள் கிளைகளை ஸ்தாபிக்க பின்கமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பகுதியில் பல்கலைக்கழகம் நிறுவ நிதி ஒதுக்கப்படவில்லை

## யாழ். நகரில் புதிய பொலிஸ் நிலையம் நிறுவ நிதி ஒதுக்கீடு

கொழும்பு, புதன்
புதிய நிதி ஆண்டிற்கான நிதியமைச்சரின் உத்தேச வரவு-செலவு மதிப்பீட்டில் தமிழ்ப்பகுதியில் பல்கலைக்கழகம் அமைப்பதற்கென நிதியெதுவும் ஒதுக்கப்படவில்லை. தமிழ்ப்பகுதியில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவப் புதிய வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படுமெனப் பொதுவாகப் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் நிதி ஒதுக்கப்படவில்லை.

ஆனல் யாழ்ப்பாண நகரில் புதிய பொலிஸ்நிலையம் ஒன்று அமைக்கவும், யாழ்ப்பாண மாவட்ட நீதிபதிக்கு புதிய பங்களா கட்டவும் மாவட்ட நீதிமன்றக் கட்டடத்தை அபிவிருத்திசெய்யவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள விதிகளைச் செப்பனிட்டுப் பராமரிக்க ருபது லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷன் இனித் தனியாக இருக்காது. ஸ்தலஸ்தாபன அமைச்சுடன் அது இணைக்கப்பட்டுவிடும்.

## சிறிமா கைதாகலாமென சில விஷமிகளின் புரளிக்கு மறுப்பு

கொழும்பு, செவ்.
திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா இலங்கையில் வந்திறங்கியதும், பெப்ரவரி சதிக்குற்றச் சாட்டின் மீது கைதுசெய்து காவலில் வைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று ஒரு பீதியை ஏற்படுத்த இடதுசாரிக் கட்சிகள் சில திட்டமிட்டிருந்ததாகவும் இத்திட்டம் அம்பலமாகியதனல் எதிர்க்கட்சியினர் திட்டமிட்ட ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டதென்றும் அறியப்படுகிறது.

திருமதி பண்டாரநாயகாவைக் கைதுசெய்யும் நோக்கம் அரசாங்கத்துக்கு ஒரு போதும் இருந்ததில்லையென்றும் பெப்ரவரிசதிசம்பந்தமான விசாரணைகளில் திருமதி பண்டாரநாயகாவை சம்பந்தப்படுத்தக்கூடிய சாட்சியங்கள்எதுவும் இருக்கவில்லையென்றும் அரசாங்க அதிகாரிஒருவர் தெரிவித்தார்.

திருமதி பண்டாரநாயகாவை பெல்கிரேட்டில் மேலும் சில காலம் தங்கியிருக்கச்செய்யவும் இங்கு ஆர்ப்பாட்டங்களை நடத்தவுமே இந்தப் பீதியை சில இடதுசாரிகள் வேண்டும் என்று கிளப்பியிருக்கலாம் என அந்த அதிகாரி சொன்னர்.

## இலங்கை வரும் ஆஸ்திரேலிய பார்லிமெண்ட் கோஷ்டி

கொழும்பு,செவ்வாய்
ஆஸ்திரேலிய பார்லிமெண்ட் தூதுகோஷ்டியொன்று 26-ந்திகதி இலங்கைக்கு விஜயம் செய்யும் ஆஸ்திரேலிய விமானப் போக்குவரத்து மந்திரி தலைமையில் வரும் இத்தூது கோஷ்டியில் இரண்டு செனட்டர்களும் இரண்டு எம். பி.க்களும் இருப்பார்களாம். வேறுஇரு அங்கத்தவர்களும் உள்ளனர்,

இத்தூது கோஷ்டியினர் இலங்கையின்பலபகுதிகளுக்கும் விஜயம் செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.


### தேவை

**இலங்கை கயரோகத் தடுப்பு (C. N. A .P. T)**

இலங்கை கயரோகத் தடுப்பு இயக்கத்தின் கிளை நிறுவனங்களின் அமைப்பாளராக (Organiser) கடமையாற்ற சாவகச்சேரி, பளையிலும், வலிகாமம் கிழக்கிலும் அமைப்பதற்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் ஜி. சி. ஈ. (உயர்தரம்) சித்தியடைந்தோர் தேவை. ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் சாதாரண சித்திபெற்றவர்களாயும் 25—30 வயதுக்குட்பட்டவர்களாயுமிருக்கவேண்டும். சமூக சேமநலப் பணிகளில் ஈடுபாடும் அநுபவமும் கவனிக்கப்படும். மேலதிக விபரங்கள்:

(1) சாவகச்சேரிக் கிளை நிறுவனத்தின் கௌரவ இணைச்செயலாளரும், தென்மராட்சிப் பிரிவுக் காரியாதிகாரியுமான திரு. ஆர் சிதம்பரப்பிள்ளையிடமும்

(2) வலிகாமம் கிழக்கு கிளை நிறுவனத்தின் செயலாளரும் உரும்பராய் பொது சுகாதார பரிசோதகருமான திரு கே. இராசசிங்கத்திடமும் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களும் இவ்விரு விலாசங்களுக்கே 2-8-66 பகல் 2 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படவேண்டும்.

எச். ஈ. ஆர். குணவர்த்தன,
நிர்வாகச் செயலாளர்,
694 இலங்கை கயரோக தடுப்பு இயக்கம்.


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி. ... இலத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ... ஜூலை மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### ரூ. 90 கோடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### வருமானம்

அடுத்த நிதியாண்டில் எதிர்பார்க்கப்படும் உத்தேச வருமானம் 195 கோடியே 80 லட்சம் ரூபாயாகும். கடந்த ஆண்டு இந்தத் தொகை 187 கோடியே 70 லட்சமாகக் கணிக்கப்பட்டிருந்தது.

### உணவு மான்யம்

அரிசி, மாவு, சீனி போன்ற உணவுப் பொருட்களின் செலவினங்களுக்கென 33 கோடியே 20 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. சீனியின் மூலம் கிடைக்கப்பெற்றுள்ள வருமானத்தையும் கணக்கில் சேர்த்துக் கொண்டபின்னரே இந்தத் தொகை கணிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் முன்னர் அஞ்சப்பட்டது போல் உணவு மான்யங்களில் எதுவித வெட்டும் செய்யப்படமாட்டாதென்று கருதப்படுகிறது.

### மிகக் கூடிய தொகை

விவசாயம், உணவு, கைத்தொழில், மீன்பிடி ஆகிய துறைகளுக்கு அதிகப்படியான செலவுத்தொகைகள் ஒதுக்கப்பட்டுள்ளன விவசாய இலாகாவின் செலவினங்களுக்கென 48கோடியே 20 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட 10 கோடியே 20 லட்சம் ரூபாய் அதிகமாகும். இதில் அதிகரிக்கப்பட்டுள்ள உணவுக்காகவும் விவசாய அபிவிருத்திக்காகவும்ஒதுக்கப்பட்டுள்ள மான்யம் 6 கோடியே 10 லட்சம் ரூபாயும் அடங்கும். கைத்தொழில் அமைச்சுக்கென 17 கோடியே 60 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

### மீன்பிடிக் கூட்டுத்தாபனம்

மீன்பிடிக் கூட்டுத்தாபனத்துக்கே இம்முறை அதிகமான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. 4 கோடியே 50 லட்சம் ரூபாய் மீன்பிடி இலாகாவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட 2 கோடியே 20 லட்சம் ரூபாய் அதிகமாகும்,

### சீமெந்துத் தொழிற்சாலை

காங்கேசன்துறை சீமெந்துத்தொழிற்சாலை புத்தளம் சீமெந்துத் தொழிற்சாலை, காலியிலுள்ள சீமெந்து உலை ஆகியவற்றின் விஸ்தரிப்புக்கென 3 கோடியே 80 லட்சம் ரூபாய் சீமெந்துக் கூட்டுத் தாபனத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

### ஆதிபத்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பது உசிதமல்ல என்று திரு. பெர்னுட் சொய்ஸா கூறினர்.

வலப்பன எம். பி. திரு. ... ஆகியோரும் பேசினர்.

## வடக்கு கிழக்கில் சிங்கள விவசாயிகள்

### மந்திரி வெளியிட்ட தகவல்

கொழும்பு, செவ்.
வடக்கு கிழக்குமாகாணங்களில் உள்ள சிங்கள விவசாயிகள் 1789 பேருக்கு 1960 ஆகஸ்ட் முதல் 1964 டிசம்பர்வரை காணி வழங்கப்பட்டிருக்கின்றது.

1965 ஜனவரி 1-ம் திகதி வரை வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள குடியேற்றத் திட்டங்களில் 118 சிங்கள விவசாயிகளுக்கு காணி பங்கீடுசெய்யப்பட்டுள்ளது.

1965 ஜனவரி 1-ம் திகதி முதல்1966ஜனவரி1-ந்திகதி வரை 932 சிங்கள விவசாயிகளுக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள குடியேற்றக் காணிகளில் நிலம் பங்கீடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று பிரதிநிதிகள்சபையில் திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி எம் பி. காணி விவசாய மந்திரியிடம் கேட்ட கேள்விகளுக்கு மேற்கண்ட தகவல்களை மந்திரி வெளியிட்டார்.

சிங்கள விவசாயிகளை வடக்கு கிழக்கு மாகாணங்களில் குடியேற்றுவதற்கு மந்திரி நடவடிக்கை எடுப்பாரா என்று திரு. ஜயக்கொடி கேட்ட கேள்விக்கு, நிலம் பங்கீட்டுக்கு வசதிப்படும் போது குடியேற்றம் விஷயமாக கவனிக்கப்படுமென்று மந்திரி கூறினர்.

## வேலைக்கார சிறுமி கொலை

### எஜமானிமீது வழக்கு தாக்கல்

கொழும்பு, செவ்
பன்னிரண்டு வயது ராணி என்னும் வேலைக்காரச் சிறுமியைக் கொலைசெய்ததாக திருமதி லீலாவதி அமரசிங்கா என்னும் பெண் மீது குற்றஞ்சாட்டி நீர்கொழும்புப்பொலிஸார், மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வழக்கு தாக்கல்செய்தனர். லீலாவதி அமரசிங்கா ரிமாண்டில் வைக்கப்பட்டார். பிம் எதிரி பொத்தேஜு ஐயாயிரம்ரூபாய் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

ராணி என்ற சிறுமி எரிகாயங்களுடன் ஒரு சாக்கினுள் கிடக்கக் காணப்பட்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு மரணமானது பற்றிய செய்தி ஈழநாட்டில் ஏற்கனவே வெளியாகியிருந்தது.

## இன்ஸ்பெக்டர் விடுதலை

பருத்தித்துறை, செவ்.
பருத்தித்துறை பீச் வீதியைச்சேர்ந்த எஸ். சின்னப்பு என்பவரை காரணமெதுவுமின்றி பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்திலுள்ள மறியல் அறைக்குள் அடைத்திவைத்ததாக பருத்தித்துறைப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் பி. இராஜேஸ்வரன்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டவழக்கு பருத்தித்துறைமாவட்டநீதிபதி திரு. . எம். குமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபின் சாட்சியங்கள் முரண்பாடாக இருப்பதாகத்தெரிவித்து எதிரியை நீதிபதிவிடுதலைசெய்தார்.

வழக்காளி தரப்பில் திரு எம். வேலும்மயிலுவின் அனுசரணையுடன் திரு. கே. ஜெயக்கொடி ஆஜரானர். எதிரிசார்பில் திரு என். நடராசா, திரு வி, பி. சுந்தரலிங்கம் ஆகியோரின் அனுசரணையுடன் திரு ரி கணேசலிங்கம் ஆஜரானர்

## ராஷ்டிரபதியின் கேரள விஜயம்

திருவனந்தபுரம், ஜூலை26
இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் இன்று இங்கு வந்துசேர்ந்தார். கேரளத்தில் அவர் இரண்டு தினங்கள் தங்கியிருப்பார்.

## தற்கொலை

ஊர்காவற்றுறை, செவ்
நாரந்தனை தெற்கு வாசியான சவிரி தொம்மை அல்லது பக்கிரி மன்பவர் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

வேலணைப்பகுதித் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். மகாலிங்கம் மரணவிசாரணை நடத்தினர். தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## தந்தையருஞ்...

(6ம்பக்கத் தொடர்ச்சி)

களது சுயபுராணமே தோற்றுகின்றது. எனது ஜீவயாத்திரைப் பாதையில் நான் விபரிக்கப்போகும் திடுக்குறும் சம்பவங்களுக்குத் தம்பிமாரின் வளர்ச்சி இளம்பராய முக்கியத்துவம் பெறுகின்றது

இன்று படித்த வாலிபர்களில் பண்புள்ளவர்கள் பத்துப்பேர்... அற்றவர்கள் தொண்ணூறுபேர். பல்கலையைப் போதிக்கும் கழகம் தன்னிலும் படிப்பவர்கள் பண்பொழுக்கம் கற்பதில்லை வகர மகரமெய் ஒழுக்கமே தலைவிரித்தாடுகின்றது. அப்படியில்லாவிட்டால் பல்கலைக் கழகத்திற்குப் புதிதாக முதன்முறை தயங்கித் தயங்கி வரும் அப்பாவி முதல்வருட மாணவனை இரண்டாம் மூன்றும் வருட அண்ணன்மார் 'துகிலுரிப் படலம்' நடத்தி நிர்வாணமாக முழந்தாட் பணியவைத்து இரவு முழுவதும் செபம்பண்ணச் செய்வார்களா? பின்னர் நாலு பேர் அந்த அப்பாவி மாணவனை அவன் அலறித் திமிற அப்படியே தூக்கித் தண்ணீர்த் தொட்டிக்குள் தொப்பெனப்போட்டு ஞானஸ்ஞானம் வைப்பார்களா? இன்னும் எத்தனை எத்தனையோ வேடிக்கைக் கூத்துகள்?

இருட்டில் தப்பித்தவறிச் சீடர் கையிலகப்படும் 'புறவெசர்' மாருக்கும் இக்கெதி நேருவதுமுண்டு கடவுளே! 'புறவெசர்' மாரையும் இந்த உத்தமசீடர் கையிலிருந்து நீதான் காப்பாற்றவேண்டும். உன்கடைக்கண் பார்வையில்லாவிட்டால் அதிவேக பூரணகுருவுக்கு இரதிக்காலத்தில் சீடர் கையில் நேர்ந்த கெதிதான் இந்தப் 'புறவெசர்' மாருக்கும் நேர்ந்துவிடவுங்கூடும், குருகுலமே! நீயெங்கே? நீ படைத்த பண்புள்ள சமுதாயமெங்கே? ஐயோ! இன்று.

தந்தையருஞ் சொற்களைதான் மைந்தன் கேளான்
தாயினையோர் பொருளாக மதிக்கமாட்டான்
முந்திவரும் மூத்தோனைக் கனமும் பண்ணான்
முதுமொழிகள் மூடர்களின் வார்த்தையென்பான்
சந்திகளில் நின்றுலவிச் சகாக்களோடும்
சரிந்த குழற்பாவையர்கள் தம்மைநோக்கி
மந்திரத்தாற் கட்டுண்ட நாகம்போல
மதியிழந்து பண்புகளை மறந்து நிற்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org